ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி அணா 4

மலர் 20 | ஜனவரி 1959 | இதழ் 1

சிக்கலைத் தீர்க்கும் சிறந்த தீர்மானங்கள்

"வருகிற ஜூனின் மாதத்திலிருந்து முதல் ஐந்து வகுப்புகளிற் பயில்கிற எந்த மாணவரிடமிருந்தும், உதவி பெறும் பள்ளி நிர்வாகிகள், கட்டணம் வசூலித்தல் கூடாது. அப்படி வசூலிக்காமல் இருந்தால்தான், அரசாங்கத்திடமிருந்து இப்போது அவர்களுக்குக் கிடைத்து வருகிற உதவித் தொகைகள் தொடர்ந்து கிடைக்கும். அப்படியில்லாமல், எந்தப் பள்ளிக்கூட நிர்வாகியாவது மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்க விரும்பினால், அவருக்கு ஆசிரிய ஊதிய உதவித் தொகை உட்பட அரசாங்க உதவித் தொகை எதுவும் தரப்பட மாட்டாது."

இத்தகைய முறையில் அமைந்த விபரீத உத்தரவு ஒன்றைத் தமிழ் நாட்டு ஆட்சியாளர்கள் சில வாரங்களுக்கு முன்னால் பிறப்பித்துள்ளார்கள் அல்லவா? அந்த உத்தீரவின் விளைவாக உருவாகியிருக்

கிற வேதனை மிக்க நிலைமைகளை எண்ணிப் பார்த்து ஆவன செய்வதற்காகச் சென்னை நகர உதவி பெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கத்தார் இரண்டு வாரங்களுக்கு முன்னால் கூடி, மூன்று அரிய தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

அந்த மூன்று தீர்மானங்களையும் ஆரம்பப் பள்ளிகளோடு தொடர்புடைய பல்வேறு திறத்தினரும் ஒரு முறைக்குப் பலமுறை கருத்தூன்றிப் படிக்கவேண்டியது அவசியத்திலும் அவசியமாகும். ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள்—ஆரம்ப ஆசிரியர்கள்—ஆரம்பப் பள்ளிகளிற் பயிலும் மாணவர்களை உடைய பெற்றோர்கள்—அரசாங்கத்தை நடத்திச் செல்லும் பொறுப்பும் சிறப்பும் மிகுந்த அமைச்சர்கள் ஆகிய அத்தனைப் பேருமே அந்தத் தீர்மானங்களை, ஓய்வாக இருந்து படித்து, அமைதியாக இருந்து ஆராய்ந்து, நியாயமான முறையில் பணியாற்றத் திடமான உள்ளத்தோடு முன்வரவேண்டியது அவர்களுடைய கடமையாகும்.

"எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வியை அளிப்பது என்கிற திட்டத்தை நாங்கள் முழு மனதுடன் வரவேற்கிறோம். ஆனால் அரசாங்கத்தார் குறிப்பிட்டுள்ளபடி, கட்டணமே வாங்காமல், அல்லது அரசாங்க உதவித் தொகையை எதிர்பார்க்காமல், பள்ளிக்கூடங்களை நடத்துவது என்பது சிறிதும் இயலாத செயலாகும்."

இதுதான் சென்னை நகர உதவி பெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கத்தார் நிறைவேற்றியுள்ள முதல் தீர்மானமாகும். இந்தத் தீர்மானம் முற்றிலும் நியாயமானது என்பதை யார் மறுக்க முடியும்? ஆசிரியர்களின் ஊதியத்திற்காக அரசாங்கத்தார் தருகிற உதவித் தொகையை மட்டும் வைத்துக்கொண்டு பள்ளிக்கூடத்தை நடத்துவது என்பது எப்படி முடியும்? அந்த ஊதிய உதவித் தொகையை (Teaching Grant) வாங்கி அப்படியே—ஒரு நயா பைசா குறையாமல்—ஆசிரியப் பெரு மக்களிடம் தந்துவிடுகிறார்கள் பள்ளிக்கூட நிர்வாகிகள். அதுமட்டுமல்ல, எத்தனையோ பள்ளிக்கூட நிர்வாகிகள், அரசாங்கத்தார் அளிக்கிற உதவித் தொகையை விட அதிகப்படியான தொகையை ஆசிரியர்களுக்கு ஊதியமாக அளித்து வருகிறார்கள். எடுத்துக் காட்டாக, பல பள்ளிக்கூட நிர்வாகிகள், ஹையர் கிரேடு பயிற்சி பெற்ற ஆரம்ப ஆசிரியர்களுக்கு, அடிப்படை ஊதியம் மட்டும் (Basic Pay) மாதம் ரூபா ஐம்பது தந்து வருகிறார்கள். ஆனால் அரசாங்கத்தார் அளித்து வருகிற அடிப்படை ஊதிய உதவித் தொகை மாதம் ரூபா 33 தான். ஆகவே அரசாங்கத்தார் தருவதை விட பதினேழு ரூபாய் அதிகமாகத் தரப்படுகிறது அத்தகைய நிர்வாகிகளால். அந்த அதிகப்படி ஊதியத்தை, அவர்கள், மாணவர்களிடமிருந்து வசூலித்து வருகிற கட்டணத் தொகையி

லிருந்துதான் இதுவரை தந்து வருகிறார்கள். மாணவர்களிடமிருந்து கட்டணமே வசூலித்தல் கூடாது என்றால், அந்த அதிகப்படி ஊதியத் தொகையை நிர்வாகிகள் எங்கிருந்து தர முடியும்?

ஆசிரியர்களுக்குத் தருகிற அதிகப்படி ஊதியம் மட்டுமல்ல. பள்ளிக்கூடக் கட்டட வாடகையாக ஒரு பெருந்தொகையைப் பள்ளி நிர்வாகிகள் மாதந்தோறும் தந்தாக வேண்டியிருக்கிறது. சென்னையைப் போன்ற நகரங்களில் இந்த வாடகைத் தொகை எளிதில் எட்டிப் பிடிக்க முடியாத உயரத்தில் பறந்துகொண்டிருக்கிறது என்பது நாடறிந்த உண்மை. மாதந்தோறும் ரூபா எழுபது—எண்பது—நூறு—நூற்றிருபது—நூற்றைம்பது என்கிற முறையில் வாடகை தரவேண்டியிருக்கிறது. மாணவர்கள் தருகிற கட்டணத்தொகையிலிருந்துதான் இந்த வாடகையை இப்போது செலுத்தி வருகிறார்கள் நிர்வாகிகள். கட்டணம் வசூலிக்காதே என்று கட்டளை பிறப்பித்து விட்டால், வாடகைப் பணத்துக்கு வழி என்ன இருக்கிறது?

ஆசிரியர்களுக்குத் தருகிற அதிகப்படி ஊதியம்,

வீட்டு வாடகை,

இந்த இரு செலவுகளைத் தவிர,

ஆசிரியர்களின் பிராவிடண்ட் நிதிக்கு நிர்வாகிகள் செலுத்த வேண்டிய பங்குத் தொகை,

ப்யூன்கள், ஆயாக்கள், பள்ளிக்கூடத்தைப் பெருக்கும் வேலைக்காரிகள், தோட்டிகள் முதலியவர்களுக்குத் தரவேண்டிய ஊதியம்,

மேசை, நாற்காலி, விசுப்பலகை முதலியவற்றைப் பழுது பார்க்கவும் புதுப்பிக்கவும் ஆகும் செலவு,

கரும்பலகை, வெண்சுண்ணத் துண்டு, நாட்டுப் படங்கள் முதலிய கருவிகள் பண்டங்கள் வாங்குவதற்கான தொகை,

ஆகிய வேறு பல தடுக்க முடியாத செலவுகளும் இருக்கின்றன.

இத்தனைச் செலவுகளையும், பள்ளிக்கூட நிர்வாகிகள், மாணவர்களிடமிருந்து பெறுகிற கட்டணத்தொகையிலிருந்துதான் ஈடு செய்ய வேண்டியிருக்கிறது, கட்டணமே வசூலிக்காவிட்டால் இந்தச் செலவுகளுக்கெல்லாம் தேவையான பணம் கிடைக்காது இந்தச் செலவுகளையெல்லாம் செய்யாமல் பள்ளிக்கூடத்தை நடத்தவும் முடியாது ஆகவேதான், அரசாங்கத்தார் தெரிவித்துள்ள திட்டத்தின் படி பள்ளிக்கூடங்களை நடத்துவது இயலாத செயல் என்று நிர்வாகிகள் சங்கத்தின் முதல் தீர்மானம் தெரிவிக்கிறது.

"உதவி பெறும் பள்ளிக்கூடங்கள் தொடர்ந்து நடைபெற வேண்டுமானால், மேலே குறிப்பிட்ட செலவுகளையெல்லாம் ஈடு செய்வதற்காக அரசாங்கத்தார், இப்போது தந்து வருகிற ஆசிரிய உதவி ஊதியத் தொகையைத் தொடர்ந்து தருவதோடு, முதல் ஐந்து வகுப்புகளிற் பயில்கிற எல்லாப் பிள்ளைகளுக்கும் கீழ்க்கண்ட முறைப்படி நஷ்ட ஈடு தரவேண்டும்."

வகுப்பு	நஷ்ட ஈடு
1	அணா 8
2	,, 10
3	,, 12
4	,, 14
5	ரூபா 1

நிர்வாகிகள் சங்கத்தார் நிறைவேற்றியுள்ள இரண்டாவது தீர்மானம் இது. மிகுந்த பொறுப்புணர்ச்சியோடும் கண்ணியத்தோடும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது இந்தத் தீர்மானம். இந்தத் தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ள நஷ்ட ஈட்டின் தொகையும் மிக மிக நியாயமானதாக இருக்கிறது. இந்த முறைப்படி அரசாங்கத்தார் நஷ்ட ஈட்டை வழங்க ஒப்புக்கொள்வார்களானால், இந்த நஷ்ட ஈட்டுத் தொகையைக் கொண்டு முன் குறிப்பிட்ட எல்லாச் செலவுகளையும் நிர்வாகிகள் ஏற்க முடியும். மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கவேண்டிய அவசியமும் இருக்காது.

எந்தக் காரணத்தாலாவது, இந்த நஷ்ட ஈட்டுத் திட்டத்தை ஏற்க அரசாங்கத்தார் தயங்குவார்களானால், நிர்வாகிகள் சங்கத்தார் தந்துள்ள மற்றோர் திட்டத்தை அரசாங்கத்தார் ஏற்றுக்கொள்வது நல்லது. ஆசிரிய ஊதிய உதவித் தொகையைத் தொடர்ந்து தருவதோடு, அரசாங்கத்தார், பள்ளிக்கூட நிர்வாகிகள் தந்து வருகிற வாடகைத் தொகையையும் தரவேண்டும் என்றும், அது தவிர ஆசிரிய ஊதிய உதவித் தொகையில் 30 சதவிகிதம் உள்ள ஒரு தொகையை நிர்வாக உதவித் தொகையாகத் தரவேண்டும் என்றும், நிர்வாகிகள் சங்கத்தார் தெரிவித்துள்ளனர். இந்த ஏற்பாடும் மிகச் சிறந்த ஒன்றாக இருக்கிறது.

இந்த இருவகை ஏற்பாடுகளில், அரசாங்கத்தார் எந்த ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டாலும் சரி, இப்போது ஏற்பட்டுள்ள சிக்கல் தீர்ந்துவிடும். அப்படியில்லாமல், அரசாங்கத்தார், கட்டணமும் வசூலித்தல் கூடாது—இத்தகைய உதவித் தொகைகளையும் தரமாட்டோம் என்று பிடிவாதமாகப் பேசுவார்களானால், பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு, தங்கள் பள்ளிக்கூடங்களை மூடுவதைத் தவிர வேறு வழி இல்லாமற் போய்விடும். பள்ளிக்கூட நிர்வாகிகள்

அத்தகைய பயங்கரமான நெருக்கடிக்குத் துரத்தாமல், அவர்கள் தெரிவித்துள்ள இரண்டு ஏற்பாடுகளில் ஏதேனும் ஒன்றை ஏற்றுக் கொள்வதே சால சிறந்த முறையாகும்.

மாணவர்களிடமிருந்து கட்டணம் எதுவும் வசூலித்தல்கூடாது என்று அரசாங்கத்தார் பிறப்பித்துள்ள உத்தரவால் ஏற்படும் விளைவுகள் பல்வேறு திறத்தவை; மிகவும் சிக்கலானவை; நிதானமாகவும் ஓய்வாகவும் இருந்து எண்ணிப் பார்த்து முடிவெடுக்க வேண்டியவை: அந்த உத்தரவால், நகரங்களில் உள்ள 1200 ஆரம்பப் பள்ளிகளும் இருப்பதா இறப்பதா என்கிற நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றன. அந்தப் பள்ளிகளில் பணியாற்றும் 15000-க்கு மேற்பட்ட ஆரம்ப ஆசிரியர்களுடைய எதிர்காலம் இருள் நிறைந்ததாகவும் இடர் மிகுந்ததாகவும் ஆகிவிட்டிருக்கிறது. அவர்களுக்கெல்லாம் இனி வேலை தொடர்ந்து கிடைக்குமா இல்லையா—அப்படியே வேலை கிடைத்தாலும் இப்போது கிடைக்கும் அளவு ஊதியம் கிடைக்க முடியுமா இல்லையா என்கிற ஆபத்தான கேள்விகளெல்லாம் உருவாகியிருக்கின்றன. ஏறத்தாழ ஆயிரம் பள்ளிகள் மூடப்பட்டு, அங்குப் பணியாற்றும் பதினையாயிரம் ஆசிரியர்கள் வேலை இழந்து, அங்குப் பயின்றுவரும் பல இலட்சம் பிள்ளைகளும் கல்வியை இழக்கக்கூடிய சங்கடமான நிலையை அரசாங்க உத்தரவு ஏற்படுத்திவிட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினைகளெல்லாம் அவசரமாக எண்ணிப் பார்த்து உடனடியாகத் தீர்த்துவிடக்கூடிய எளிய பிரச்சினைகளல்ல. எனவே, வருகிற ஜூன் மாதத்திலிருந்து தொடக்கமாகும் கல்வி ஆண்டைப் பொறுத்த வரையில், இப்போது நடைமுறையில் உள்ள திட்டமே தொடர்ந்து இருக்க வேண்டுமென்றும், கட்டணமில்லாக் கல்வி என்கிற புதிய திட்டத்தை, 1960—61 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரலாம் என்றும், அப்படி அந்தத் திட்டத்தை ஒத்தி வைத்தால்தான், அந்தத் திட்டத்தை ஆர அமர இருந்து அலசி ஆராய்ந்து ஒரு நியாயமான முடிவுக்கு வர முடியுமென்றும், நிர்வாகிகள் சங்கத்தின் மூன்றாவது தீர்மானம் தெரிவிக்கிறது.

தமிழ்நாட்டின் ஆரம்பக் கல்வித் துறையானது சீரும் சிறப்பும் மிகுந்த முறையில் செழித்து ஓங்கி உயர்ந்து பொலிய வேண்டும் என்கிற நல்லெண்ணமும் சிந்தனைத் தெளிவும் படைத்த அத்தனைப் பேரும் இந்தத் தீர்மானங்கள் மூன்றையும் முழுமனதோடு ஒப்புக் கொள்வார்கள் என்பதில் இளியும் ஐயமில்லை.

தமிழ்நாட்டு அரசாங்கத்தார் இந்தத் தீர்மானங்கள் மூன்றையும் ஏற்றுக்கொண்டு, அவற்றில் குறிப்பிட்டுள்ள முறைப்படிப் பணியாற்றத் தொடங்கினால், ஆரம்பக்கல்வி செழித்து வளரும்; ஆரம்ப ஆசிரியர்களின் எதிர்காலம் ஒளி மிகுந்ததாகத் திகழும்; மாணவர்கள்

அனைவருக்கும் கட்டணம் இல்லாத கல்வியும் கிடைக்கும்; அரசாங்க உத்தரவால் ஏற்பட்டுள்ள எல்லாச் சிக்கல்களும் எளிதில் தீர்ந்து விடும்.

சிக்கல்களைத் தீர்க்கும் அச் சிறந்த தீர்மானங்கள் மூன்றையும் ஏற்பார்களா ஆட்சியாளர்கள்?

ஏற்பதுதான் முறை. ஏற்ருல்தான் கல்வித் துறையானது சிறப்புடன் விளங்கும்.

எய்டெட் பள்ளி நிர்வாகிகளுக்கு ஓர் வேண்டுகோள்

1-6-59 முதல், எய்டெட் பள்ளிகளில் பிள்ளைகளிடமிருந்து சம்பளம் வசூலிக்கக் கூடாதென்றும், ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் Assessed Grant, மாதாந்தர கிராண்டைக் கொண்டு பாடசாலைகளை நடத்தவேண்டுமென்றும் சமீபத்தில் வெளியான அரசாங்க உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் புதிய உத்தரவால் முனிசிபல் எல்லையிலுள்ள சுமார் 1,200 சம்பளம் வாங்கும் பாடசாலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கட்டட வாடகை கொடுத்து நடத்தப்படும் பாடசாலைகள் 1-6-59 முதல் பாடசாலைகளை மூடவேண்டிய நெருக்கடியும் ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஏற்படாமல் பாடசாலைகளைத் தொடர்ந்து நடத்த கட்டட வாடகையும், Assessed Grant-ல் 30 சதவீதம் உயர்த்தி மாதாமாதம் நிர்வாகக் கிராண்ட் கொடுக்க வேண்டுமென்றும், சென்னை எய்டெட் பாடசாலை நிர்வாகிகள் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றனர். அத்தக் கோரிக்கையை எவ்வளவு தூரம் அரசாங்கம் அங்கீகரிக்கும் என்று தெரியவில்லை.

சங்கத்தின் கோரிக்கை முழுதும் அங்கீகரிக்கப்படவில்லையானல், நிர்வாகிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதத்தில் சட்ட பூர்வமான Service Register Agreement படி 1-6-59 முதல் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக ஓர் ஹையர் கிரேடு ஆசிரியருக்குசம்பளம் வசூலிக்கும்பாடசாலையில் சுமார் 50ரூபாய் ஆக ஆதாரச் சம்பளம் தற்போது கொடுக்கப்படுகிறது. ஆனல் 1-6-59 முதல் அரசாங்கம் ரூ. 33 தான் அக்குறிப்பிட்ட ஆசிரியருக்குக் கொடுக்கும். வித்தியாசம் உள்ள ரூ. 17-ஐ பாடசாலை சம்பளம் வசூலிக்காத காரணத்தால் நிர்வாகிகள் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. அக்ரிமெண்ட் (Service Register) பிரகாரம் ஓர் ஆசி

ரியர் தனக்கு ரூ. 50 சேரவேண்டுமென்று நீதிமன்றத்தில் தாவா செய்வாரானல், சர்விஸ் அக்ரிமெண்ட்படி ரூ. 17 நிர்வாகி கொடுக்கும்படிதான் நீதிமன்றத்தில் நியாயம் வழங்கப்படும்.

நிர்வாகிகளின் கோரிக்கையை அரசாங்கத்தார் எக்காரணத்தினுலோ அசம்பாவிதமாக நிராகரித்துவிட்டால் பல பாடசாலைகளை மூடிவிட வேண்டியது தவிர வேறு வழியில்லை. அப்பொழுது ஆசிரியர்களை திடீரென்று 1-6-59-ல் 3 மாத நோட்டீஸ் கொடுக்காமல் நீக்கிவிடுவதும் சட்ட விரோதமாகும். இத்தகைய சட்ட சிக்கலும், மனக் குழப்பமும் குறிப்பாக சென்னை எய்டெட் பள்ளி நிர்வாகிகளுக்கு ஏற்பட்டு வருகிறது. அதன் காரணமாக முன்னெச்சறிக்கையாக ஆசிரியர்களுக்கும், சிப்பந்திகளுக்கும் Service Agreement படி 3 மாத நோட்டீஸ் கொடுத்துவிட்டு, கல்வி அதிகாரிகளுக்கும் தெரிவித்துவிட்டால் பின்னல் பல கஷ்ட நஷ்டங்களுக்கு ஆசிரியர்களும் நிர்வாகிகளும் ஆளாகாமல் இருக்கலாம் என்பது சென்னை எய்டட்பள்ளி மானேஜர்களின் கருத்தாகும். அதன்படி சில எய்டட் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு நோட்டீஸ்களும் கொடுக்கப்பட்டு வருகின்றன. அத்தகைய நோட்டீஸ் எவ்வித முறையில் அமைய வேண்டுமென்று சில நிர்வாகிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் மாதிரிப் பிரதி ஒன்று நமது பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறோம். இதை அப்படியே ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பது அல்ல நமது கருத்து. சட்ட நிபுணர்களையும், கல்வி அதிகாரிகளையும் கலந்தாலோசித்து அவரவர்கள் பாடசாலைகளின் சூழ்நிலைக்குத் தக்கபடி முன்னெச்சரிக்கையாகக் கொடுப்பது நலம் என்று நாம் கருதுகின்றோம். பிப்ரவரி முதல் வாரத்தில் கனம் முதல் அமைச்சர் அவர்கள், சென்னை எய்டட் பள்ளி நிர்வாகிகள் சங்கத்தின் சார்பில் தம்மைப் பேட்டி காண அனுமதி தந்திருக்கிறார். அதுமட்டுமல்ல, கல்வி மந்திரியையும் பேட்டிகாண சென்னை எய்டட்பள்ளி நிர்வாக சங்கத்தார் பல ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட சென்னை எய்டட் பள்ளி நிர்வாகிகள், ஜில்லா வாரியாக, அந்தந்த ஜில்லாக்களின் M. L. A.-க்களின் துணை கொண்டு சென்னைக்கு வந்து, பிப்ரவரி முதல் வாரத்தில் சட்ட சபை கூடும்பொழுது, கனம் முதலமைச்சரையும், கனம் கல்வி அமைச்சரையும் பேட்டி கண்டு, தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

P. வீரராகவன்,
தலைவர்,
சென்னை மாகாண எய்டட் பள்ளி நிர்வாகிகள் சங்கம்,
94/95, புதுத்தெரு, மண்ணடி,
சென்னை-1.

THE MODEL FORM OF THE NOTICE OF TERMINATION OF SERVICE THAT MAY HAVE TO BE GIVEN TO THE TEACHING & MENIAL STAFF :—

Sir/Madam,

The Management has received a copy of the G. O. and the Director's Proceedings R. O. C. No. 940-B 7/58 dated 5-12-58. As per the said G. O. with effect from 1-6-1959 this school has to be run, either (1) as a fee-levying School collecting fees from all pupils of Standards I to VIII with no Government Aid either by way of Teaching Grant or Compensation Grant or (2) as a non-fee levying School upto Standards V and collecting fees for Standards VI To VIII. For Standards I to V the Government will pay only the usual grants and aids in force.

The Management is convinced that the deficit arising out of items of expenditure like (1) the excess salary, D.A., and allowances to teachers over and above the grants paid, (2) salary and D. A. of Menials (3) T. P. F. Contribution (4) Postage (5) Rent or Tax (6) Repairs and white-washing (7) Lighting (8) Conveyance (9) Printing and Stationery (10) Contingencies, cannot be met fully either with fee collections alone if the institution is run as a Fee Levying School or with the usual grants in aid according to the rules and orders in force if it is run as a Non-Fee Levying School. In either case it will become necessary to wind up the present establishment and re-organise the school on a different basis with the bare minimum number of Sections and on revised salaries and scales of pay to the Staff. Hence the Management feels that it will be impossible to continue the services of all the members of the present establishment. Further the Management is not now in a position to determine finally either the furture position of the school or the machinery to run the school from 1—6—59 onwards.

Therefore the Management is driven most reluctantly to the painful necessity of informing all the members of the present teaching and menial staff that their services will be terminated with the expiry of the month of May 1959 and that their Services will not be required on and from 1—6—1959.

MANAGER.

டிட்டோ

குதுப்மினர்! தாஜ்மஹால்!! அஜந்தா சிற்பம்!!!

இவைகளின் பெயரைக்கூடக் கேள்விப்படும் வாய்ப்பு இருந்திருக்க முடியாது—அவ்வளவு எளிய சாதாரணக் குடும்பம். ஓட்டல் வேலை, உலோகத் தொழிற்சாலை, போர்க்களம் இவைகளிலே உழன்று கொண்டிருந்த நாட்களில், வெளி நாடுகளிலே வெற்றி பவனி, பல நாட்டு ராஜதந்திரிகளுடன் மந்திராலோசனை, பிற நாட்டுப் பாராளு மன்றங்களில் சொற்பொழிவாற்றுவது எனும் நிகழ்ச்சிகள் நடைபெறக் கூடும் என்ற எண்ணம் கூட எழ முடியாது. ஒரு காலத்தில் அத்தகைய வாழ்க்கையிலே இருந்து வந்தவர்தான் தளபதி டிட்டோ.

மார்ஷல் டிட்டோவின் 'விஜயம்' என்ன பலன் தரும் என்பது அல்ல, எப்படிப்பட்டவர் இப்படிப்பட்ட 'உயர் நிலை' பெற்றார் என்பதே கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

* * *

பதினைந்து குழந்தைகள்! டிட்டோ ஒன்பதாவது!!

டிட்டோ என்பது அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் அல்ல. அவர் புரட்சிக்காரராகி, போலீசார் வேட்டையாடியபோது, தலைமறைவாகத் திரிய வேண்டி நேரிட்டபோது சூட்டிக் கொண்ட மாறு பெயர், டிட்டோ என்பது.

இப்போது அவருடைய சொந்தப் பெயர் வழக்கற்றுப் போய் விட்டது—அவனி அவரை டிட்டோ என்றே அழைக்கிறது.

1892-ம் ஆண்டு பிறந்தார். பெற்றோர், ஜோசிப் பிராஸ், என்று பெயரிட்டனர்.

பதினைந்து குழந்தைகள் கொண்ட குடும்பம். எனவே, ஜோசிப், செல்வமாக வளர்க்கப்படத் தக்க நிலை இல்லை - அவர் ஒன்பதாவது என்றால் யூகித்துக்கொள்ளுங்களேன்.

ஆரம்பப்பள்ளியில் படித்து முடிப்பதற்குத்தான் வசதி கிடைத்தது.

வயல் வெளியோ, உலைக்கூடமோ, ஏதாவதோர் இடத்தில் உழைத்து கஷ்ட ஜீவனம் செய்து தீரவேண்டிய நிலைமை.

இந்தச் சிறுவன், ஒரு நாட்டின் ஒப்பற்ற தலைவனாகி, உலகு புகழ் செல்வாக்குபெறக்கூடும் என்று யாரும் கருதியிருக்க மாட்டார்கள்.

பரமபிதா பெரும் பாரத்தைச் சுமத்தி விட்டார் — பதினைந்து குழந்தைகள் - எப்படி இவர்களை எல்லாம், 'வளர்த்துவிட'ப் போகிறோம், என்றுதானே பெற்றோர் கவலைப்பட்டிருக்க முடியும்.

பனிரெண்டாவது வயதிலேயே ஜோசிப், வேலைசெய்யக் கிளம்ப வேண்டியதாயிற்று.

எந்த வேலையாக இருந்தாலும் செய்து தீரவேண்டும். அவன் வயிற்றுக்குத் தேவையான ரொட்டியை அவன் சம்பாதித்துக்கொண்டால் போதும் என்று பெற்றோர் எண்ணினர்.

ஓர் ஓட்டலில் 'பையனாக' வேலைபார்க்க நேரிட்டதாம் ஒரு முறை.

பிறகு ஓர் என்ஜினியரிங் தொழிற்சாலையில் வேலையாளாகச் சேர்ந்து 17 வயது வரையில் அங்கு வேலை செய்து, தொழில் கற்றுக் கொண்டு, தன் கிராமத்துக்கு ஜோசிப் திரும்பி வந்தான். கும்ரோவிக் என்பது அந்த கிராமத்தின் பெயர்.

பல தொழில்கள்-ஒரே அலைச்சல்-எல்லாம் வாழ்க்கை வண்டியை ஓட்ட.

இருபதாம் ஆண்டைக் கடந்ததும், ஜோசிப், கட்டாய ராணுவ சேவையில் ஈடுபட்டான், 1914-ல், களம் சென்றான்.

சார்ஜன்ட் மேஜர் ஜோசிப் பிராஸ், களத்தில், கடும்போரில் ஈடுபட்டு, படுகாய மடைந்து பதின்மூன்று திங்கள் ராணுவ வைத்திய சாலையில் படுத்துக் கிடந்தார். இந்த விடுதி, ஒரு மாதர் கோயிலில் அமைக்கப்பட்டிருந்தது.

ஜோசிப், மேலதிகாரியின் கோபத்தைக் கிளறும் வகையில், நிர்வாகக் கோளாறைக் கண்டித்திடவே, சமயம் கிடைத்தபோது, ஏதோ சாக்கு சுமத்தி, ஜோசப்புக்குச் சிறைத் தண்டனை கிடைக்கும்படிச் செய்துவிட்டார் அந்த அதிகாரி. ஆனால், அதே போது வெடித்தது ரஷிய புரட்சி-ஜோசிப்புக்கு விடுதலை கிடைத்தது. விடுதலை மட்டுமா! புதிய உள்ளமே கிடைத்தது !!

அந்த இளைஞன் கண் முன்பாக, ரஷியாவை ஆட்டிப்படைத்த ஜாராட்சி 'சடசடெனச் சரிந்தது' தெரிந்தது ! பணிந்து கிடந்த பாமரன் நிமிர்ந்து நின்றதைக் கண்டான்! சிறை என்றால் ஓர் கேலிச் சிரிப்பு. தூக்குமேடை ! என்றால் புன்னகை, சாதாரண மக்களிடம் எழுச்சிகண்டான் ! ஊமை, உரத்த குரலில் பேசிடக் கேட்டான்! கூனிக் குறுகிக் குற்றேவல் புரிந்து கிடந்தவரெல்லாம், ஏறு நடை போட்டு,

எங்கள் உரிமையை அழித்திட இனி அனுமதிக்க மாட்டோம், என்று எக்காளமிட்டனர்-புருவத்தை நெறித்தாலேபோதும் புரட்சி பொசுக்கப்பட்டு விடும் என்று நம்பிக்கிடந்த மாளிகை மதோன்மத்தர்கள், மதுக் கோப்பைக்குக் கடைசி முறையாக முத்தமிட்டு விட்டு, தலை தெறிக்க ஓடிடக் கண்டான்! உலகு கண்டு வியந்த ஒப்பற்ற ரஷியப் புரட்சியைக் காணும் வாய்ப்பு ஜோசிப்புக்குக் கிடைத்தது. அதனை விடச் சிறந்ததோர் பல்கலைக்கழகம், ஏது! ஜோசிப், புது உள்ளம் பெற்றான்.

புரட்சி பூத்த பூங்காவில் உலவிய ஜோசிப்பின் இளம் உள்ளத்தில், புதியதோர் இலட்சியம் உருவாயிற்று. அதே புரட்சிப் பூங்காவில் அவனுக்குக் காதற் கனியும் கிடைத்தது. பதினாறு ஆண்டுப் பாவை பெலாகியா என்பாளை மணம் புரிந்துகொண்டான். இப்போது, இருப்பவர் இரண்டாந்தாரம்.

ஜோசிப்புக்கு ஏற்கெனவே, பாட்டாளிகளின் பாசறை அமைப்பதில் அக்கறை அதிகம்—ரஷியப் புரட்சியைக் கண்டதால் கிடைத்த புத்தார்வம், ஜோசிப்பைத் தொழிலாளர் இயக்கத்தில் மேலும் அதிக ஆர்வத்துடன், நல்ல நம்பிக்கையுடன் ஈடுபட வைத்தது.

ஜோசிப்புக்குத் தொழிலாளர் இயக்கத் தொடர்பும், அதில் பயிற்சியும், கிடைத்த இடம், உலோகத் தொழிலாளர்கள் சங்கம்.

ஜோசிப், சிதறிக்கிடந்த தொழிலாளர்களை ஒரே அணிவகுப்பிலே கொண்டு வருவதிலும், பல தொழிற் சங்கங்களில் பலமும் பக்குவமும் சேர்ப்பதிலும் ஈடுபட்டு, பாட்டாளிகளின் தலைவன் என்ற நிலை பெற்றான் — சர்க்காருடைய பார்வையிலும் பட்டான்—அதன் விளைவாக 1928—ல், ஐந்தாண்டுத் தண்டனை விதித்தது சர்க்கார்.

1934—ல் விடுதலை கிடைத்தது. ஆனால் போலீஸ் கண்காணிப்பில் இருக்கவேண்டும் — சொந்தக் கிராமத்தை விட்டு வெளியேறக் கூடாது என்ற நிபந்தனை.

போலீசை ஏய்த்துவிட்டு, ஜோசிப் வெளியேறிவிட்டான்—அப்போது தனக்குத்தானே வைத்துக்கொண்ட பெயர்தான், டிட்டோ!

1937-லிருந்து இந்தப் பெயர், நிலைத்துவிட்டது!

தலைமறைவாக இருந்தபோது, முதலில் ஓடி என்ற பெயர் சூட்டிக்கொண்டார் — ஆனால் அதே புனைபெயர் வேறு ஒருவருக்கு இருந்ததால், டிட்டோ ஆக மாற்றிக்கொள்ள நேரிட்டது.

மாஸ்கோவிலிருந்து, யூகோஸ்லோவியா பாட்டாளி இயக்கத்தைப் போராட்ட அமைப்பாக மாற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டபோது, டிட்டோ மாஸ்கோ சென்று பயிற்சி பெற்றார்.

அங்கு அவருக்கு வால்ட்டர் என்று பெயரிடப்பட்டது.

டிட்டோவால்தான் யுகோஸ்லோவியாவின் விடுதலையை ஏற்படுத்த முடியும் என்று புரட்சி வட்டாரம் உறுதியாகக் கூறுமளவுக்கு டிட்டோவின் செல்வாக்கு உயர்ந்தது—அவருடைய தளராத உழைப்பால் யுகோ நாட்டுக் கம்யூனிஸ்டு கட்சியின் செயலாளரானார்.

ஹிட்லர் மூட்டிவிட்ட பெரும்போர், டிட்டோவின் இலட்சியம் நிறைவேறும் வாய்ப்பாகிவிட்டது.

அரண்மனை வாழ்வும் சுகபோகமும் நிலைத்தால் போதும், ஆட்சி நம்மிடம் இருந்தால் என்ன, நம்மைவிட 'வலிவு' பெற்றுள்ள ஹிட்லர் வசம் சென்றால் என்ன, என்ற ஈனத்தனமான எண்ணம் கொண்ட பால் அரசன், ஹிட்லருடன் சமரச ஒப்பந்தம் செய்துகொண்டு, யுகோ நாட்டில் ஜெர்மன் தளம் அமைக்க இணங்கினான்.

டிட்டோவின் மனம் கொதித்தது. உண்மை நாட்டுப் பற்று கொண்டவர்கள், துக்கதினம் கொண்டாடிக் கண்டனத்தைத் தெரிவித்தனர். நாட்டிலே, உணர்ச்சிமிக்கோர் கிளர்ந்தெழுந்தனர். விமானப்படையில் இருந்த இளைஞர் சிலர் கிளம்பினர், பால் கைது செய்யப்பட்டு, நாடு கடத்தப்பட்டார்.

சரணாகதி அடைந்த மன்னனைத் தொலைத்தாகிவிட்டது.

ஜெர்மன், இத்தாலிய, ராணுவம் நாட்டிலே பவனி வருகிறது.

டிட்டோ, இதுதான் சமயம் என்று உணர்ந்தான்.

பாட்டாளிகளையும் பொது மக்களையும் வீராவேசம் கொள்ளும்படிச் செய்தான்.

விடுதலைப் போர்க்கமிட்டி நிறுவப்பட்டது; டிட்டோவே தலைவர். படைத் தளபதியும் டிட்டோவே. அப்போதுதான், அவர் மார்ஷல் டிட்டோ ஆனார்.

டிட்டோவின் அபாரமான ஆற்றலால் விடுதலைப் படை 1943-க்குள் ஹிட்லருக்குத் தலைவலி தருமளவுக்கு, வீறுகொண்டதாகிவிட்டது. நாடு, டிட்டோவின் சொல் கேட்டு நடக்க ஆரம்பித்துவிட்டது.

தெஹ்ரான் மாநாட்டில், ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் எனும் முப்பெருந் தலைவர்கள் கூடிப் பேசியபோது மார்ஷல் டிட்டோவின் விடுதலைப் படைக்கு மதிப்பளித்து, யுகோ நாட்டை, நேசநாடு என்று அறிவித்தனர்.

—"திராவிட நாடு"

வெண்ணிலாவை அடைய விஞ்ஞானிகள் முயற்சி

மிகவும் குறைந்த அளவு எரி பொருளை உபயோகித்து, சந்திர மண்டலத்தைச் சுற்றிவரும் ராக்கெட் பயணம் சம்பந்தமான சாத்தியப்பாடுகள்பற்றி, சோவியத் பத்திரிகைகளில் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த கிரக மண்டலப் பிரயாணம் சம்பந்தமான திட்டத்தைத் தயாரித்துள்ள பேராசிரியர் இஸட், செபோடரியோவ். டி. உன். ஸி. அவர்கள், இப்பிரயாணம் பற்றிய கணக்குகளையும் புள்ளி விவரங்களையும் அளித்துள்ளார். 'டாஸ்' நிருபர் அவரைப் பேட்டி கண்டபோது, அவர் அளித்த பதில்களைக் கீழே பிரசுரிக்கிறோம்.

—ஆசிரியர்.

கேள்வி :—தங்களுடைய திட்டப்படி சந்திர மண்டலப் பிரயாணம் எவ்வாறு ஈடேறும் என்று கூறுவீர்களா?

பதில்:—பிரபஞ்ச வெளிப் பிரயாணம் சம்பந்தமான துணிச்சலான திட்டங்கள் பல இப்பிரயாணத்திற்கான போதிய எரி பொருள் இல்லாததினுல் தோல்வியடைந்திருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இன்று வரையில், பிரபஞ்ச வெளிக் கப்பல்களுக்கு அவசியப்படும் எரி பொருள் சம்பந்தமான பிரச்னை தீர்க்கப்படாமலேயே இருந்து வந்துள்ளது. மனிதர்கள் ஏறிச் செல்லாத ராக்கெட் கப்பலை சந்திர மண்டலத்திற்கு அனுப்புவதென்ருல்கூட, பல்லாயிரக் கணக்கான டன் எடையுள்ள எரி பொருள் தேவைப்படும் என்று கருதப்படுகிறது. எனது கணக்குப்படி, பூமியிலிருந்து ராக்கெட் கப்பலைப் பறக்கவிடும் ஆரம்ப கட்டத்தில் சுமார் 16 டன் எரி பொருள் தேவைப்படும். இந்த ராக்கெட்டானது பூமியின் வெளி மண்டலத்தைத் தாண்டிய பிறகு, பூமி, சந்திரன் இவ்விரண்டின் ஆகர்ஷண சக்தியின் உதவியால், தொடர்ந்து பிரயாணம் செய்யும்.

புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்து முடியும் ஒரு குறிப்பிட்ட பாதை வழியாக ராக்கெட் கப்பல் பிரயாணம் செய்கிறது. பூமியிலிருந்து சந்திரனுக்கும், பிறகு சந்திரனிலிருந்து பூமிக்கும் உள்ள தூரம் பூராவையும் 236 மணி நேரத்திற்குள், அதாவது சுமார் 10 நாட்களுக்குள் இது பிரயாணம் செய்துவிடும். இப்பிரயாணத்தின் தூரம் சுமார் 4,16,666 மைல்களாகவும், ராக்கெட் முதலில் புறப்படும் போது, விநாடி ஒன்றிற்கு சுமார் $4\frac{1}{2}$ மைல் (11 கிலோ மீட்டர்) வேகத்தில் பறக்கும். இதற்குக்

குறைவான வேகத்தில் பறந்தால் பூமியின் ஆகர்ஷண சக்தியை மீறிக்கொண்டு முன் செல்வது முடியாமல் போய்விடும். சந்திர மண்டலத்திற்கு அருகாமையில் ராக்கெட்டின் வேகம் குறையத் தொடங்கி இறுதியில் பூஜ்ஜியமாகி விடுகிறது.

கேள்வி:—ராக்கெட் எவ்வாறு பூமிக்குத் திரும்பிவரும்?

பதில்:—ஆகாயத்தில் ஒரு கல்லை விட்டெறிகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அது மேல் நோக்கிச் செல்லச் செல்ல, அதன் வேகம் ஆரம்பத்திலிருந்ததை விடக் குறைந்துகொண்டே போய், இறுதியில் பூஜ்ஜியமாகி விடுகிறது. அதன் பிறகு அது பூமியை நோக்கிக் கீழே இறங்கும் போது, அதன் வேகம் மென்மேலும் அதிகமாகிறது. ராக்கெட்டுக்கும் இது பொருந்தும். பிரயாணத்தின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் பூமியின் ஆகர்ஷண சக்திக்கு ராக்கெட் கப்பல் உட்படுத்தப்படுவதினால், அது பூமியிலிருந்து புறப்பட்டபோது கிளம்பிய அதே வேகத்தில் பூமிக்குத் திரும்பி வந்துவிடும். பூமியில் திரும்பி வந்து விழும்போது, சேதம் ஏற்படாதிருக்கும் பொருட்டு, ராக்கெட் கப்பலுடன் ஒரு விசேஷ பாரசூட் சாதனம் பொருத்தப்படும். சந்திர மண்டலத்திற்கு நாம் அனுப்பி வைக்கும் நமது 'தூதுவர்' பூமியின் வெளிமண்டலத்திற்குத் திரும்பியவுடன், இந்த பாரசூட் சாதனம் இயங்கத் தொடங்கிவிடும்.

நமது ராக்கெட் ஆகாயத்தில் விட்டெறியும் கல்லைப் போன்று அமைந்திருக்காது என்பதைக் கூறத் தேவையில்லை. பிரம்மாண்டமான வேகத்தில், பிரபஞ்ச வெளியில் வீசியெறியப்படும் சக்கரப் படையுடன் இதை ஒப்பிடுவது பொருத்தமாக இருக்கலாம். ஒரு காட்டுப் பறவையைக் குறி வைத்து வீசப்படும் சக்கரப் படையானது, குறி தவறிப் போய்விட்டால் அதை வீசியவனின் காலடியில் திரும்பி வந்து விழுவது போல, ராக்கெட்டும் புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்துவிடுகிறது. ராக்கெட்டை கிரக வெளிக்குள் அனுப்பி வைக்கிறோம்; அது சந்திர மண்டலத்தைச் சுற்றி வருகிறது; பிறகு பூமிக்கே திரும்பிவிடுகிறது இதே போல், சந்திரனுக்கு நேராகச் சென்று, சந்திரனிலேயே இறங்கித் தங்கியிருப்பதற்கான பயணத்திற்கு அவசியமான புள்ளி விவரங்களையும் தயாரிக்க முடியும்.

கேள்வி:—சந்திரனைச் சுற்றி வரும் இந்தப் பிரயாணத்தின் பலனாக, விஞ்ஞானத்திற்குக் கிடைக்கும் ஆதாயம் என்ன?

பதில்:—110 முதல் 220 பவுண்டு எடையுள்ள நமது ராக்கெட் கப்பலில் தானாகவே பதிவு செய்துகொள்ளும் பல்வேறு வகையான இயந்திர சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கும். இது பிரபஞ்ச வெளியில் பிரயாணம் செய்வதால், கிரக மண்டலத்தின் தன்மையையும், குணாதிசயங்களையும்பற்றிய புதிய விவரங்களை

நாம் தெரிந்துகொள்ள முடியும். இதல்லாமல் விண் கற்களின் சஞ்சாரம் சம்பந்தமாக நமக்குக் கிடைத்துள்ள விவரங்களை மீண்டும் சரிபார்ப்பதற்கும், வானிலை ஆராய்ச்சிபற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்வதற்கும் இது உதவி புரியும். மேலும் இந்தப் பிரபஞ்ச வெளிப் பிரயாணத்தில், ராக்கெட்டுடன் ஒரு சுண்டெலியையோ, சீமை எலியையோ அனுப்பி வைப்பதில் எவ்வித கஷ்டமுமில்லை.

சந்திரனைச் சுற்றி வரும்போது, நமது ராக்கேட் கப்பலுக்கும் சந்திரனுக்கும் இடையிலுள்ள தூரம் 12,500 மைல்கள்தான் என்பது கவனிக்கத்தக்கது. பூமியிலுள்ள நாம், சந்திரனுடைய ஒரு பகுதியைத்தான் பார்க்க முடிகிறது என்பது தெரிந்ததே. ஆனால், இப்பொழுது நமது ராக்கெட்டில் பொருத்தப்பட்டுள்ள சினிமா காமிராக்களாலும், புகைப்படக் காமிராக்களாலும் எடுக்கப்படும் ஏராளமான படங்களின் உதவியுடன், சந்திரனுடைய மற்றொரு பகுதியை நாம், முதல் தடவையாக கண்ணுறும் வாய்ப்பு ஏற்படும். சந்திரனைச் சுற்றி வெளி மண்டலம் எதுவும் இல்லையாதலால், சாதாரணமாக பூமியின் வெளி மண்டலத்தில் ஏற்படும் குழப்பங்கள் எதுவுமின்றி புகைப் படங்களை எடுப்பது சாத்தியமாக இருக்கும். பிரம்மாண்டமான தூரத்திற்கு அப்பாலிருந்து, சந்திரனை போட்டோ பிடிப்பதில் கூட, பல சுவாரஸ்யமான விஷயங்களை நாம் பார்ப்பது சாத்தியமாகும்.

கேள்வி :—இதே முறையில் செவ்வாய் கிரகத்திற்கு ராக்கெட்டை அனுப்புவது சாத்தியமா?

பதில் :—இதுவரையில் சந்திர மண்டலப் பிரயாணம் பற்றிய புள்ளி விவரங்களை மாத்திரமே கூறினேன். இவற்றை வான நூல் தத்துவக் கழகக் கவுன்ஸிலின் அறிஞர்கள், பூரணமாக ஆராய்ந்து பார்த்து அங்கீகரித்துவிட்டனர். கூடிய சீக்கிரத்தில் நான் தயாரித்துள்ள புள்ளி விவரங்களும் முடிவுகளும் அச்சிட்டு வெளியிடப்படும். செவ்வாய் கிரகத்திற்கு பிரயாணம் செய்வது சந்திர மண்டலப் பிரயாணத்தைவிட மேலும் சிக்கலானதாகும். நாங்கள் முதலில் சந்திர மண்டலப் பிரயாணம் சம்பந்தமான புள்ளி விவரங்களைத் தயாரித்த போது, பூமி, சந்திரன் ராக்கெட் இம்மூன்றின் ஈர்ப்பு, எதிர்-ஈர்ப்பு சக்திகளை முக்கியமாக கணக்கிலெடுத்துக்கொள்ளவேண்டியிருந்தது. ஆனால், செவ்வாய் கிரகத்திற்கு பிரயாணம் செய்வதென்றால் சூரியனின் செல்வாக்கையும், அனேகமாக வெள்ளி, புதன் ஆகிய கிரகங்களின் செல்வாக்கையும் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். இவ்வாறு புதிய கோளங்கள் சேர்க்கப்படுவதினால், வான நூல் கணக்குகளையும் புள்ளி விவரங்களையும் தயாரிப்பது மிகவும் சிக்கலான

தாகிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆயினும் இந்தப் பிரச்னையைக் கோட்பாடு ரீதியாகத் தீர்க்க முடியும். தற்பொழுது நானும் நமது விஞ்ஞானிகள் சிலருமாகச் சேர்ந்து செவ்வாய் கிரகத்தைச் சுற்றி விட்டு பூமிக்குத் திரும்பும் ராக்கெட்டைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறோம்; இந்த ராக்கெட்டின் பிரயாண மார்க்கத்தை நிர்ணயிப்பதற்கு அவசியமான புள்ளி விவரங்களை நாங்கள் இப்பொழுது தயாரித்துக்கொண்டிருக்கிறோம். இதுவும்கூட அதிகமான எரி பொருள் இல்லாமல் பிரயாணம் செய்யக்கூடியதாகவே அமைந்திருக்கும்.

கேள்வி :—சந்திரனுக்கு ராக்கெட் கப்பல் ஒன்றை அனுப்பி வைப்பது எப்பொழுது சாத்தியமாகும் என்று நீங்கள் கருதுகிறீர்கள் ?

பதில் :—எங்களுடைய கழகம் இப்பிரச்னையின் கருத்தியல் துறை சம்பந்தமான விஷயங்களிலேயே முக்கியமாக ஈடுபட்டுள்ளது. அண்ட கோளங்களின் இயக்கத் துறையில், ஆராய்ச்சிகளை நடத்துவதிலும், சூரிய மண்டலத்திலுள்ள கோளங்களுக்கு இடையிலுள்ள உறவுகளை கண்டறிவதிலும் எங்கள் கழகம் முனைந்துள்ளது. பிரபஞ்ச வெளிப் பிரயாணத்திற்கான வளை பாதையையும் நாங்கள் கணக்கிட்டுவிட்டோம். ராக்கெட்டைக் கட்டுவதும், அதன் பிரயாயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதும், முழுக்க முழுக்க இஞ்சினியர்கள் செய்ய வேண்டிய வேலையாகும். எது எப்படியிருந்தாலும், தொழில் நுட்ப முன்னேற்றம் வெகுவாக வளர்ந்துள்ளதினால், இத்தகைய ராக்கெட்டை அமைத்து, அதன் பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்வது முற்றிலும் சாத்தியமே. அடுத்த வருடம் சர்வதேச பூகர்ப்ப பௌதீக ஆண்டு கொண்டாடப்பட விருப்பதினால், பூமியை சுற்றி வரும் உபகிரகம் ஒன்றைத் தயாரித்து, அதை பிரபஞ்ச வெளியில் விடுவதிலேயே நாங்கள் இப்பொழுது முழு கவனம் செலுத்தி வருகிறோம். இந்த வேலை முடிந்தவுடன், சந்திரனைச் சுற்றிவரும் ராக்கெட் பயணம் சம்பந்தமான பிரச்னை அனேகமாக எடுத்துக்கொள்ளப்படலாம். சந்திர மண்டலப் பிரயாணம் ஒரு சில ஆண்டுகளில் சாத்தியமாகலாம் என்பது துணிபு.

—" சுதேசமித்திரன் "

மருது பாண்டியர்

தாமரைக் கண்ணன்

நாடகத்தில் உலவுவோர்

பெரிய மருது சின்ன மருது	...	*சிவகங்கை ஜமீனைச் சேர்ந்தவர்கள்*
முத்துவடுகநாத உடையணத் தேவர்	...	*சிவகங்கை அரசன்*
வேலு நாச்சி	...	*அரசி*
புதுக்கோட்டைத் தொண்டைமான்	...	*புதுக்கோட்டை மன்னன்*
முத்தய்யன்	...	*உண்மைத் தொண்டன்*
முனியம்மா	...	*முத்தய்யன் மனைவி*
கறுத்தான்	...	*தொண்டைமான் கையாள்*
கண்ணம்மா	...	*கறுத்தான் மனைவி*
கர்னல் வெல்ஷ் கர்னல் அக்நியு கர்னல் பிளாக்பர்ன்	...	*வெள்ளைத் தளபதிகள்*
படமாத்தூர் தேவர்	...	*சிவகங்கையின் புதிய அரசன்*

மற்றும்

ஆர்க்காட்டு நவாப், ஹைதர் அலி, குண்டான், குறுணி முதலியோர்

காட்சி 10

மைசூர் — மகாராஜா அரண்மனை

(பெரிய மருதுவும் வேலு நாச்சியும் இருக்கின்றனர். கிழவன் பண முடிப்பையும், ஓலைச் சுருளையும் அரசியிடம் கொடுக்கிறான். அவள் சுருளைப் பிரித்து செய்தியைப் படிக்கிறாள்.)

வேலு நாச்சி :—*(வாசிக்கிறாள்)...நாங்கள் இப்போதும் தயார்தான். நீங்கள் நாளைக்கே வந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம். ஆறாயிரம் தோழர்கள் போரில் உயிரை விடுவதற்கும் துணிந்து*

நிற்கிறார்கள். உடனே வாருங்கள். வாடிய பயிர் வான் மழையை நோக்குவதைப் போல, தங்கள் வருகையை எதிர் நோக்குகிறோம்.

இந்தப் படிக்கு,
சிவகங்கை மக்கள்.

பெ. மருது :—எவ்வளவு நன்றியுள்ளவர்கள். எட்டு ஆண்டுகளாக வருடம் தவறாமல் நமக்கு வரி செலுத்தியிருக்கிறார்கள். நவாபு ஏமாந்து விட்டான்.

வேலு நாச்சி :—வரலாற்றிலேயே ஒரு புதுமை. அரசி அரசிழந்து வெளி நாட்டில் இருக்கும்போதும், மக்கள் தாங்களாக வரி வசூலித்து, தேடி வந்து கொடுத்துவிட்டுப் போகிறார்கள். நல்ல அபிமானிகள்...!

கிழவன் :—நாம இன்றைக்கே நம்ம சீமைக்குப் புறப்படலாமுங்க.

வேலு நாச்சி :—புறப்படலாம். பெரியவரே! நீங்கள் தள்ளாத காலத்திலும் எங்கள் நலத்துக்காக ஆண்டுதோறும் வரிப்பணம் வசூல் செய்துவந்து கொடுத்தீர்கள்...

பெ. மருது :—அது மட்டுமா? சிவகங்கையிலிருந்து அடிக்கடி செய்தி கொண்டு வந்திருக்கிறார். அடங்கிக் கிடந்த தமிழர்களுக்கு சுதந்தர உணர்ச்சி ஊட்டி யிருக்கிறார். அவருக்கு அன்பளிப்பாக ஏதாவது கொடுக்க வேண்டும், வேலு!

கிழவன் :—எனக்கு எதுக்குங்க அய்யா, அன்பளிப்பு! நாடு நல்லா இருந்தா போதுமுங்க.

வேலு நாச்சி :—எங்கள் சின்ன மருதுகூட இப்படித்தான், எப்போதும் நாட்டின் நலம் பற்றி பேசிக்கொண்டிருப்பார். ஓ... இப்போதுதான் கவனம் வருகிறது. சின்னவர் வெளியே சென்று இரண்டு நாட்களாகியும் இன்னும் திரும்பவில்லையே... அவர் இல்லாமல் நாம் எப்படி அண்ணா, புறப்படுவது?

பெ. மருது :—அதுதான், வேலு...எனக்கும் சிந்தனை!

கிழவன் :—நான் சிறுவயலிலிருந்து வர்றபோது, வழியில் அவரைப் பார்த்தேனுங்க. அவருக்கு சிவகங்கையில் முக்கிய வேலையிருக்கிறதாம். நம்மை வந்துவிடச் சொன்னாருங்க.

வேலு நாச்சி :—சரி! நாம் மகாராஜா ஹைதர் அலியிடம் விடை பெற்றுக் கொள்வோம்.

(ஹைதர் அலி வருகிறார். ஒருவர்க்கு ஒருவர் வணக்கம் செலுத்திக் கொள்கின்றனர்.)

ஹைதர் அலி :—என்ன தோழரே! இன்னும் சில நாள் தங்கிச் செல்லலாமே! இராணியார் என்ன சொல்கிறார்கள்?

வேலு நாச்சி :—மிக்க நன்றி, மகாராஜா! நாங்கள் சந்தர்ப்பம் நேரிட்ட போதெல்லாம் இங்கே வந்து தங்குவதற்குப் பெரிதும் உதவினீர்கள். வெள்ளையரை எதிர்க்கப் போட்ட திட்டங்களுக்கு ஒத்துழைத்தீர்கள். இப்போது, சிவகங்கையை எங்களிடமே மீண்டும் ஒப்படைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஆர்க்காட்டு நவாபுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் நாங்கள் நாட்டில் இருந்தால் நெருக்கடியைச் சமாளித்துக் கொள்ளும் வேலையில் ஈடுபட ஏதுவாகும். ஆகவே...

ஹைதர் அலி :—சரி. உங்கள் சௌகரியப்படி செய்யுங்கள்.

பெ. மருது :—தங்கள் உதவி எப்போதும் வேண்டும்.

ஹைதர் அலி :—தேவைப் பட்டால் செய்தி அனுப்புங்கள்; அவசியம் உதவுகிறேன். எப்படியாவது கும்பினியார் ஒழிந்தால் அதுவே போதும். இராணியாரே! தங்கள் பிரிவையொட்டி ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்கிறேன். விருந்துக்குப் பிறகு கலை நிகழ்ச்சியும் உண்டு.

— திரை —

காட்சி 11

மைசூர்—மகாராஜா அரண்மனை.

(விருந்துக்குப் பின்னர் சுதந்தர வாழ்வு பற்றிய கலை நிகழ்ச்சிகள் நடக்கின்றன. முடிந்ததும்...)

வேலு நாச்சி :—(கை கூப்பி) விடை கொடுங்கள், மகாராஜா!

ஹைதர் அலி :—உடன் பிறந்தோரைப் போலப் பழகிவிட்டோம். பிரியவே மனம் இல்லை.

பெ. மருது :—சந்தர்ப்பம் வாய்க்கும்போது ஒரு முறை வந்து போகிறோம்.

வேலு நாச்சி :—தாங்களும் சிவகங்கைக்கு வந்தருள வேண்டும்.

ஹைறதர் அலி :—முயற்சிக்கிறேன்.

(பிரியா விடையுடன் பிரிகின்றனர். இராணியும், பெரிய மருதுவுடன் கிழவனும் குதிரைகள் மீதேறிச் செல்கின்றனர்.)

— திரை —

காட்சி 12

மதுரை—கர்னல் வெல்ஷ் துரையின் இல்லம்.

(வெல்ஷ் துப்பாக்கியைச் சரி பார்த்துக் கொண்டிருக்கிறான். அவனுடன் கறுத்தானும், கர்னல் அக்நியு என்பவனும் உள்ளனர். முத்தய்யன் இரண்டு பழக் கூடைகளும், இரண்டு மூட்டை அரிசியும் கொண்டு வருகிறான். வெள்ளையருடன் இருப்பதைக் கண்டு திடுக்கிறான்.)

வெல்ஷ் :—ஓ...! முத்தய்யனா...? வா...வா...! இவர்கள் நமக்கு வேண்டியவர்கள் தான்.

முத்தய்யன் :—இதை நம் சின்ன எசமான் அனுப்பினாருங்க.

வெல்ஸ் : அவர் என்னை மறக்கவே யில்லையே...மிக்க மகிழ்ச்சி.

அக்நியு :—யார் அவர்?

வெல்ஸ் :—சிவகங்கை ஜமீனில் இருப்பவர்...சின்ன மருதேந்திரர்.

அக்நியு :—ஓ...கேள்விப் பட்டிருக்கிறேன். பெரிய மருது என்பவர் கூட அங்கே யிருக்கிறாரமே...அவர் பெரிய வீரராம்.

வெல்ஸ் :—'வீரர்' என்று சாதாரணமாகச் சொன்னால் போதாது. கையில் கத்தி, கம்பு இல்லாமல் என் எதிரிலேயே எத்தனையோ புலிகளையும், சிங்கங்களையும் கொன்றிருக்கிறார். வீரத்தில் 'குஷ் வமிசத்தையும்' தோற்கடிப்பார்...வேட்டையில் நிபுணர் ...பாபிலோனிய மக்கள் வீரத்திற்குத் தந்தையாக 'நிம்ராட்' டைச் சொல்வார்கள். பெரிய மருது கீழ்த்திசை 'நிம்ராட்!'

அக்நியு :—இவர்கள் எப்படி உமக்குப் பழக்கம்...

வெல்ஸ் :—ஒருநாள் வழிப்போக்கின் போது சின்ன மருதுவை சாதாரணமாக சந்தித்ததுதான். அன்றுமுதல் நட்பு வளர்ந்தது. சின்ன மருதிடம் நான் தமிழ்நாட்டுப் போர் முறைகளைக் கற்றுக்

கொண்டேன். குறிப்பாக 'கதை' எறியும் வித்தையை அவனி டமே கற்றேன். இப்போது அத்துறையில் நல்ல தேர்ச்சி... முந்நூறு அடிக்கு அப்பால் உள்ளவர்களையும் குறிபார்த்து அடித்து சுலபத்தில் வீழ்த்தி விடுவேன்.

முத்தய்யன் :—நான் வரட்டுங்களா...?

வெல்ஷ் :—ம்...மூட்டையில் என்ன, முத்தய்யா!

முத்தய்யன் :—ஒரு மூட்டையில் சீரகச் சம்பா அரிசி. இன் னொன்றில் இளநீர்க் காய்கள்.

வெல்ஷ் :—நல்லது, முத்தய்யா! சின்ன அய்யாவிடம் சொல். நான் முன்பு சுபேதாராக இருந்தேன் அல்லவா? இப்போது கர்னல் பதவி கிடைத்திருக்கிறது.

முத்தய்யன் :—அய்யாவுக்கு முன்பே தெரியுமுங்க.

வெல்ஸ் :—எப்படியோ தெரிந்துகொண்டிருக்கிறாரே.

அக்நியு :—நல்ல உள்ளம் அவருக்கு! வெள்ளைக்காரர் விரோதிகளாக இருந்தும், உமது நட்பை இன்னும் மறக்கவில்லை. பழகிவிட்ட தால் உம்மைப் பழைய நண்பராகவே இன்னும் கருதுகிறார்.

வெல்ஷ் :—நான் அனுபவத்தில் பார்த்திருக்கிறேன். தமிழர்களிடம் உள்ள உயர்ந்த பண்பாடுகளில் இதுவும் ஒன்று...ம்... முத்தய்யா! சிவகங்கை நிலைமை எப்படி யிருக்கிறது?

முத்தய்யன் :—இராணியம்மாவுக்கு உடல் நிலை சரியில்லைங்க. அதனால் ஆட்சியை நம்ம மருதய்யங்களே கவனிச்சுக்கறாங்க. மற்றபடி, நாடு சுபிட்சமா இருக்குது.

வெல்ஷ் :—சின்ன அய்யாவுக்கும் பெரிய அய்யாவுக்கும் என் நன்றி யையும் வணக்கத்தையும் சொல், முத்தய்யா!

(கறுத்தானைக் கூர்ந்து நோக்கிய வண்ணம், விடைபெற்று வெளியே செல்கிறான். கறுத்தான் அவனை அலட்சியமாகப் பார்த்து விட்டு ஆரஞ்சுப் பழங்களை எடுத்து உரித்து இருவர்க்கும் கொடுக்கிறான்.)

அக்நியு :—(தின்று கொண்டே) நல்ல ருசி...

வெல்ஸ் :—இந்தியாவிலேயே இவ்வளவு சுவையுள்ள ஆரஞ்சுப் பழங்களை நான் வேறு எங்கும் தின்றதில்லை. வாரத்திற்கு ஒரு

முறை அரிசியும் பழ வகைகளும் தவருமல் அனுப்பி விடுவார் சின்ன மருது.

அக்நியு:—மிஸ்டர் வெல்ஷ்! இவர்கள் விஷயத்தில் நீர் சற்று ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும்.

வெல்ஸ் :—ஏன்...?

அக்நியு :—என்றைக்கிருந்தாலும் அவர்கள் கம்பெனியின் பகைவர்கள்.

வெல்ஷ் :—அதனால், எங்கள் நட்பை இழந்துவிட நான் தயாராக இல்லை, தோழரே!

அக்நியு :—வாட்...! (சிரித்து) எனக்கென்ன? அனுபவத்திற்கு வரும்போது நீராகவே தெரிந்து கொள்ளப் போகிறீர்.

(கருத்தான் சீவிக் கொடுத்த இளநீரைக் குடிக்கின்றனர்.)

வெல்ஷ் :—கருத்தான்!

கருத்தான் :—சார்...!

வெல்ஷ் ;—துப்பாக்கிகளை எடுத்துக்கொள். வேட்டைக்குச் செல்வோம். புறப்படலாமா, மிஸ்டர் அக்நியு!

அக்நியு :—ஓ...!

(இருவரும் புகைத்துக் கொண்டே செல்கின்றனர், கருத்தான் துப்பாக்கிகளோடு, அக்நியு கூறிய 'வாட்...' என்ற சொல்லை, இரண்டு மூன்று தடவை உச்சரித்து பயிற்சி செய்துகொண்டே அவர்கள் பின் நடக்கிறான்.)

— திரை —

காட்சி 13

சிவகங்கை—அரண்மனை

(வேலு நாச்சி மரணப் படுக்கையில் உள்ளாள். அவளைச் சுற்றி மருது சகோதரர்கள், முத்தய்யன், மற்றும் பலர்.)

வேலு நாச்சி :—(மெல்லிய குரலில்) அரசர் மறைந்த பிறகு, எனக்கு எவ்வளவோ உறுதுணையாக இருந்தீர்கள். தாய்நாடு அடிமை

யாகக் கூடாது என்று உயிரைக் கொடுத்தும் போராடினீர்கள்! என் அவா—சிவகங்கை யாருக்குமே அடங்கி யிருக்கக்கூடாது. சுதந்தரத்தோடு வாழவேண்டும்!

பெ. மருது :—எல்லாவற்றையும் நாங்கள் கவனித்துக்கொள்கிறோம். நீங்கள் அமைதியாக இருங்கள்.

வேலு நாச்சி :—(மூச்சுத் திணறியபடி) உங்கள் இருவரின் நம்பிக்கை ஒளிவீசும் முகங்களைப் பார்க்கும் போதெல்லாம் நான் அமைதியாகவே இருக்கிறேன். கடமை வீரன் கட்டபொம்மனைத் தூக்கில் இட்டு ஓராண்டு ஆகிறது. ஆனால், அந்தக் கண்ணியவானைக் காட்டிக் கொடுத்த கயவர்கள் இன்னும் வாழ்கிறார்கள். அவர்களுடைய கழுகுப் பார்வையில் சிக்காத வண்ணம் நீங்கள் விழிப்போடு இருக்கவேண்டும். ஊமைத்துரைக்கு உதவியாக வீரர்களை அனுப்பிக்கொண்டே யிருங்கள். அவர் நம்மைப் போன்றவர்களின் உதவியை நம்பிதான் கொள்ளைக்கார வெள்ளையரை எதிர்த்துத் தன்னந்தனியாகப் போரில் குதித்திருக்கிறார்.

சி. மருது :—தங்கள் விருப்பத்தின்படியே நடக்கிறோம், அம்மா! நீங்கள் ஓய்வாக இருங்கள். உடல் நலமில்லாதிருக்கும்போது எதைப்பற்றியும் அதிகமாக சிந்திக்கக்கூடாது.

வேலு நாச்சி :—எனக்கென்னவோ... எல்லோரையும் ஒரு தடவை பார்க்கவேண்டும் போல இருக்கிறது.

சி. மருது :—இன்னும் யாரையாவது பார்க்கவேண்டுமா...?

வேலு நாச்சி :—(முனகியபடி) முன்பு, நாம் நாட்டுக்கு வெளியில இருந்தபோது நமக்கு வரி வசூலித்துக் கொடுத்தாரே... அந்தக் கிழவர்... அவரைத்தான் பார்க்க வேண்டும்.

(சின்ன மருது வேதனையுடன் எழுந்து உள்ளே செல்கிறான்.)

வேலு நாச்சி :—(பெரிய மருதுவை நோக்கி) அண்ணா! இனி நான் பிழைக்க மாட்டேன். என்னை நம்பாதீர்கள்! என் உயிர் அடங்கி வருவது எனக்கே நன்றாகத் தெரிகிறது.

(கிழவன் வருகிறான். அவன் கண்களில் நீர் தளும்புகிறது.)

வேலு நாச்சி :—வாருங்கள், பெரியவரே! நீங்கள் செய்த உதவிக்கு ஈடாக எதையுமே சொல்ல முடியாது. என் சிறிய அன்பளிப்பாக காளையார் கோவிலைத் தருகிறேன். பெற்றுக்கொள்ளுங்

கள். (அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு) இன்னும் எதற்காக, அண்ணா, இந்த வேஷத்தில் இருக்கிறீர்கள்? இந்தக் கோலத்தில் கடைசியாக உங்களைப் பார்க்க ஆசைப்பட்டேன். நீங்கள் யார் என்று எனக்கு முன்பே தெரியும்...

(வேஷத்தைக் கலைக்கிறான்...சின்ன மருது!)

நாட்டு நலனில் தங்களுக்கு இருக்கும் அக்கறை வேறு யாருக்குமேயில்லை, அண்ணா! நீங்களும் அண்ணாவும் ஒற்றுமையாக இருந்து ஜமீனைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

(அரசியின் கண்கள் மூட, தலை சாய்கிறது. அனைவரும் நீர் சொரியும் கண்களுடன் தலை தாழ்த்துகின்றனர்.)

— திரை —

காட்சி 14

சிறு வயல்—முத்தய்யன் வீடு.

முத்தய்யன் :—முனியம்மா...

முனியம்மா :—என்ன, மச்சான்!

முத்தய்யன் :—நான் அரண்மனைக்குப் போய் வர்றேன். இன்னைக்கு நம்ப சீமை பெரியவங்க எல்லாம் மருதுராசாவிடம் என்னவோ வேண்டுகோள்விடப் போறாங்களாம்.

முனியம்மா :—எவனாவது எப்படியாவது போ(கி)றான். அரை நாழிகை நேரம் பக்கத்திலே உட்காந்து ஆசைதீரப் பேசறியா, நீ! எப்ப பார்த்தாலும் 'மகாராசா...மகாராசா'ன்னு அங்கேயே ஓடிப் போறியே. இங்கே, நாலு வேலி நிலம் இல்லாம நாறிக் கிடக்கிறோம்.

முத்தய்யன் :—உனக்கு கொஞ்சம்கூட விசுவாசமே இல்லேடி. மருதர சருக அரசுக்கு வந்தப்புறம்தான் சீமை எவ்வளவோ செழிப்பா இருக்கே. அப்பகூட உனக்கு விடியலேயே.

முனியம்மா :—ஆமா! ஹூக்கும்! பறங்கிப்படையிலே சேர்ந்திருந்தா இன்னும் எவ்வளவோ சம்பாதிச்சிருக்கலாம். கறுத்தானைப் பாருங்க. எப்படி யிருக்கா(ன்). ஒண்ணு சுயபுத்தியாவது இருக்கணும். இல்லே... சொல்புத்தியாவது கேட்கணும். உனக்கு இரண்டுமே இல்லே.

முத்தய்யன் :—வாயை மூடிக்கிட்டி, முட்டாள். பேராசை பிடிச்சு அலையாதேடி... அப்புறம் இருக்கிறதும் போய்விடும். ஏலே, நான் மாலே கருக்கிறபோதுதான் வீடு திரும்புவேன்.

(போகிறான். முனியம்மா கழுத்தை நொடிக்கிறாள்.).

— திரை —

காட்சி 15

சிறுவயல்—அரண்மனை.

(மருதேந்திரர் இருவரும் உள்ளனர். முத்தய்யன், சின்ன மருதுவின் மகன் துரைசாமி முதலியவர்களோடு, சாந்துப் புலவரும், மறவர் பெருமக்களும் அவையில் அணி செய்கின்றனர்.)

சாந்துப் புலவர் :—(எழுந்து) அவையோரே! அறிவு சூழ் பெரியோரே! உங்கள் சார்பாக நான், நமது சிவகங்கை அதிபதிகளான மருதேந்திரர்களிடம் ஒரு விண்ணப்பம் செய்து கொள்கிறேன். நான் கோரப்போகும் உதவி நமக்குப் பெரியது... ஆனால் சேர்வைக்காரவர்களுக்கு சிறியது. அவர்கள் மனம் வைத்தால் போதும். மலையும் கடுகாகும்... மணலும் கயிறாகும்! அவர்கள் எண்ணினால் எல்லாம் இனிது முடியும்." அவர்கள் எண்ணினார்கள்......

உடனே, குன்றக்குடி முருகனுக்கு மலைமீது திருக்கோயில் உருவாகியது; அங்கிருந்து தெரியும் வண்ணம் மருதாபுரிக் குளம் உண்டாகியது; அதன் கரையில் ஆயிரம் தென்னை மரங்கள் வளர்ந்தன. குன்றக்குடி குமரக் கடவுளின் அழகிய மார்பில் 'சின்ன மருது உபயம்' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பொற்கவசம் மின்னுகிறது. மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் அணையா விளக்குகளாக இரு 'திருவாட்சித் தீபங்கள்' மினிர்கின்றன. அதன் நெய் செலவுக்காக 'ஆவியூரை' மனமுவந்து அளித்தார்கள்.

மருதேந்திரர்களின் இதயத்தில் சமரசப் பேரழகு பொதிந்துள்ளது. அவர்கள் நரிக்குடியில் ஒரு மசூதியையும், சருகணியில் ஒரு மாதாகோவிலும் கட்டியுள்ளனர். மற்றும், நமது சீமையில் அவர்கள் கட்டியுள்ள சத்திரங்களும் ஊருணிகளும்

ஏராளம்...ஏராளம். இத்தகைய பேருள்ளம் படைத்த பெரியோர்களிடம் ஒரே ஒரு விண்ணப்பம்....

சி. மருது :—விண்ணப்பம் என்னவென்று புலவர் இன்னும் சொல்லவில்லையே.

சாந்துப் புலவர் :—தாங்கள் விரும்பும்படி ஆண்டவன் விஷயம் தான். காளையார் கோவில் திருக்கானப்பேர் என்னும் பாடல் பெற்ற ஸ்தலம் அல்லவா? அங்கே திருக்கோவில் ஒன்று உருவாக்க விழைகிறோம்.

பெ. மருது :—அதற்கென்ன? செய்தால் போயிற்று. வனத்தின் மத்தியில் இருக்கும் அந்த இடத்தில் சிறந்த மதில்களையும் மண்டபங்களையும் கட்டுவது மிகவும் நல்லதே. மற்ற நேரங்களில் கோயிலாகக் காட்சியளித்தாலும், போர்க் காலங்களில் அரணாகப் பயன்படும். இல்லையா, தம்பி!

சி. மருது :—ஆமாம்! அதுவும் நல்ல திட்டம்தான். சாந்துப் புலவரே! காளையார் கோவிலின் ஆலய வேலையை இன்றே ஆரம்பித்து விடுங்கள்.

புலவர் :—மானாமதுரை செங்கற்களே சிறந்தவை... உரம் வாய்ந்தவையும்கூட...

சி. மருது :—அங்கிருந்தே வரவழைத்துக் கொள்ளலாம்.

புலவர் :—இன்னொன்று... கோவிலுக்குச் சொந்தமான தேர் ஒன்று.

சி. மருது :—செய்து கொள்ளுங்கள்; திருவாரூர் தேரைப் போன்று அழகானதாக... அதைப்போலவே வேலைப்பாடுமிக்கதாக...

பெ. மருது :—கோயிலுக்கருகில் நீராழி ஒன்றும் வெட்டிவிடலாம்—குடிநீருக்கு வசதியாக இருக்கும்.

சி. மருது :—புலவரே! மயூரகிரிக்கோவை பாடி மண்ணகமெங்கும் புகழ் பெற்றவர், தாங்கள். பொறுப்புக்களைத் தாங்களே ஏற்றுக் கொள்ளுங்கள். காரியங்களை விரைவில் முடித்துவிடுவோம்.

(தொடரும்.)

போதிய நேரம் ஓய்வுகொள்க.

(பேராசிரியர் தாவீது மாசிலாமணி,)

நமது காலம் களைப்பு மிகுந்த காலம். நம்மைச் சூழ்ந்துள்ளார் அனைவரும் களைப்புற்றிருப்பதாக முறையிடக் கேட்கின்றோம். இது பெரும்பாலும் உடற்களைப்பினால் உண்டாகும் முறையீடு அன்று: நரம்புத் தளர்ச்சியினாலும், ஊக்கக்குறைச்சலினாலும் உண்டாகும் முறையீடே. நமது உயிர்வாழ்கை கடுமையாய் இருத்தலால், நாம் முன்னினும் ஊக்கமாய் உழைத்தல் தேவையாகின்றது. ஆயின், மக்கள் ஒவ்வொருவருக்கும் ஓய்ந்திருப்பதால் கிடைக்கும் இளைப்பாறுதல் முன்னினும் மிகக் குறைவே. தொழில் செய்வதற்குச் சிறந்த நேரமும், உண்பதற்குக் குறைந்த நேரமும், இன்ப நுகர்ச்சிக்கு எல்லாவற்றினும் மிகுந்த நேரமும் குறித்துள்ளோம். இந்தக்குறிப்பில் ஓய்ந்திருப்பதற்கு நேரம் எது? தொழில் மிகவும் தேவை என்றும் உணவு இன்றியமையாதது என்றும், பொழுதுபோக்கு அவசியம் என்றும் நினைத்திருக்கின்றோம். உறக்கமோ நம் விருப்பு வெறுப்பில் அடங்கியுள்ளது. பந்தய விளையாட்டு வல்லுநர் காலம் பெறப் படுக்கப் போவதாலும், நெடுநேரம் துயில்வதாலும், ஒருவாறு குழந்தைப் பருவவுணர்ச்சி பெறுகின்றார்.

உறக்கமின்மை உயிர்க்குக் கேடு

"உடல்நலம் பெறுதற்கு ஓய்வு நேரம் வைத்துக்கொள்க" என்று இயற்கை நமக்குக் கட்டளையிடுகின்றது. மக்கள் உடம்பு என்னும் நுண்ணிய இயந்திரப் பொறி தன் வாழ்க்கைச் செலவில் உண்டாகும் தேய்மானத்தை மீட்டுக்கொள்வதற்கும், தனக்குப் புது வலிமையைத் தேடிக்கொள்வதற்கும், அதற்குப் போதிய நேரம் வேண்டும். தேனீக்கள் மூளையும் தூக்கணாங் குருவிகள் மூளையும் பகற் பொழுதின் உழைப்பில் தம் உயிரணுக்களை முற்றிலும் செலவிட்டு, பின்பு இரை அருந்துவதாலும், ஓய்ந்திருப்பதாலும் அவற்றை மீட்டுக்கொள்ளுகின்றன என்று அறிஞர் ஒருவர் ஆராய்ந்து கண்டுள்ளார். உணவுக் குறைவினும் பார்க்க உறக்கக் குறைவினால் விலங்கு வாழ்க்கை மிக்க விரைவில் மாய்ந்து போகின்றது எனச்சிலர் செப்புகின்றார். மக்கள் தமக்கு உணவு இல்லாது ஆறு கிழமை— நாற்பத்திரண்டு நாள் — உயிர் வாழ்ந்திருப்பினும், பத்து நாள் அவர் சிறிதும் உறக்கமின்றி இருப்பாராயின், உயிர் நீப்பர் என்பது உறுதி. மக்கள் துயில் இன்றி விழித்திருக்கக் கூடிய

நெடும்பொழுது அறுபது மணி நேரமே. அந்த நேரத்தின் முடிவில், இளைப்பாறுதற்குரிய எல்லாவுயிர்களும் தூங்கிவிடுகின்றன. அப்பால் கிளர்ச்சிப் பொருள் எதுவும் அவற்றை விழித்திருக்கப் பண்ண இயலாது.

துயில் என்பது மக்கள்யாக்கை தன்னைப் பழுது பார்ப்பதற்குக் கதவைச் சாத்தி வைத்திருக்கின்ற நேரம். துயில் வேளையில் தசை அமைப்புத் தளர்ந்துவிடுகின்றது, இதயம் மிக்க மெதுவாகத் துடிக்கின்றது, குருதி அழுத்தம் தாழ்வடைகின்றது, உடல் வெப்பம் தணிகின்றது, வியர்வை மிகுதியாய் வெளிப்படாது, செரிமானச் சுரப்பிகள் ஓய்ந்துவிடும். மன முயற்சி குறைந்து போகும், உடலுறுப்புக்கள் அனைத்தும் மெல்ல மெல்லவே தொழில் இயற்றும். துயில் வேளையில் யாக்கைக்குப் புத்துயிர் அளிக்கும் புதுமைச் செயல் நிகழ்கின்றது. உறுப்புக்கள் ஒவ்வொன்றும்மீண்டும் புதிய உழைப்பிற்குத் தம்மை ஆயத்தப் படுத்திக்கொள்கின்றன. இவ்வலுவல் நடைபெறுதற்குரிய நேரத்தைக் குறைப்போமாயின், அவை அரைகுறை ஆயத்தத்துடனே அந்நாள் வேலையைச் செய்யத் தொடங்கி ஓய்வுபெறாது உழைத்தலால், உடல்நலம் கேடுறுகின்றது.

கோல்கேட் பல்கலைக் கழகத்தில் துயில் பற்றித் தொடர்ச்சியாகச் செய்துள்ள பற்பல ஆராய்ச்சி முறைகளினால், உடல்நலப் பெருவழியிற் செல்லுதற்கு உணர்ச்சிகள் நமக்குத் தவறாத வழிகாட்டிகள் ஆகா என எடுத்துக் காட்டியுள்ளனர். அவ்வாராய்ச்சிக் காலத்தே, இரண்டு மணி நேரம் உறக்கம் குறைந்தோர் முற்றிலும் வாடிக்கையான நிலையிலேயே இருப்பதாகத் தோன்றியது. எனினும், முன்னை அளவு வேலை செய்வதற்கு 10 முதல் 25 சதவிகிதம் வரை அதிக ஊக்கம் அவர்க்குத் தேவை ஆயிற்று. தூக்கம் இல்லாது வேலை செய்வது, விசைவண்டி சமவெளியில் குண்றந்த வேகத்தில் ஓடுவதற்கு நிகர் ஆகும். விசைவண்டி ஓடுகின்றது, இறுதியாகக் குறித்த இடத்திலும் சேர்கின்றது. ஆயினும், முன்னினும் மிகுதியான வாயு செலவாகின்றது; இயக்கும் பொறி முன்னிலும் அதிகம் தேய்வு அடைகின்றது. துயிலின்மை எவரையும் உடனே கொன்றுபோடாது. எனினும், அது நிலவுலகத்தை அரை குறைப் பிணியாளிகள் படையினால் நிரப்புகின்றது. அன்னோர் எப்பொழுதும் களைப்புற்றவராயும், குற்றுயிர் கொண்டவராயும் காட்சி அளிக்கின்றனர்.

துயில் அளவு

உடம்பிற்கு எவ்வளவு துயில் தேவை? துயில் அளவு வயதிற்கும் உடலமைப்பிற்கும் அலுவல் வகைக்கும், பருவ காலத்திற்கும் தக்கவாறு வேறுபடும். வலுக் குறைந்தோரும், பதற்றமுடையோரும், மனத்தை நெடும்பொ

மூது ஒரே நிலையில் ஊன்றித் தொழில் செய்வோரும் மிகுந்த நேரம் துயிலல் வேண்டும். உடற் கூறுகள் இளைப்பாறுதற்கு நான்கு மணி நேரம் போதும் என்றும் நரம்பு மண்டல நடுநிலைக் களன்கள் களைப்பு நீங்கித் தெளிவடைவதற்கு எட்டுமணி நேரம்தேவை என்றும், ஆராய்ச்சியாளர் ஒருவர் அறைகின்றார். வேறு வகையாகக் கூறின் பருவுடற் கூறுகளைக் களைப்பாற்றிப் புதுக்குவதினும் பார்க்க, மின் கொதுமல் நுண் நெறியை ஒழுங்காகச் சீர்ப்படுத்துவதற்கு மிகுதியான நேரம் செலவாகின்றது. மாரி காலத்தில் மக்களுக்குத் துயில் அதிக அளவு வேண்டும்.

குழந்தைகள் போதிய அளவு துயிலாவிடின், அவர்கள் வளர்ச்சியும், நிறையும் குறைந்து, அவர்களுக்கு எரிச்சலும், படபடப்பும் தோன்றும். அவர்கள் உடம்பில் உழைப்பினால் உண்டாய பழுது நீங்கி ஊக்கம் நிலவுதற்கே அன்றி, அவர்கள் உடல் வளர்ச்சி அடைதற்கும், உணவுப் பொருளும், ஓய்வு நேரமும் தேவை. பின் வருவது சராசரி துயில் அளவு:

வயது			துயில் அளவு	தொடங்கும் நேரம்		
சிறு குழவிகள்			15 முதல் 20 மணி	மாலை 6	அல்லது	7 மணி
4 முதல்	7	வயது வரை	12 மணி நேரம்	,, 7	,,	8 ,,
8 ,,	11	,,	11 ,,	,, 8	,,	8½ ,,
12 ,,	14	,,	10 ,,	,, 8½	,,	9 ,,
15 ,,	18	,,	9½ ,,	,, 9	,,	9½ ,,
வயது வந்தவர்			8-9 ,,	,, 9	,,	10 ,,

இதனினும் மிகக் குறைந்த அளவுதுயில் தங்களுக்குப்போதுமென்று கூறுவோர் உளர் எனின் அவர் ஓய்வு வேளையை மற்றையோரினும் நன்கு பயன்படுத்துவோர் ஆவார். அன்றேல் பகற் பொழுதில் அலுப்புத் தீர்த்துக் கொள்ளும் முறையில் முற்றப் பயின்றோர் ஆவார். ஒரு சிலர் போதிய அளவிற்கு மேல் துயில்கின்றார். அதனால் உயிர் உணர்ச்சியற்று வாழுந் தன்மை மிகுந்து, சோம்பேறித் தனத்திற்கு வழி உண்டாகும். ஒருவர் பத்து மணி நேரம் துயின்றும் அவர்க்குக் களைப்பு நீங்கவில்லை யெனில் அவர் மிக்க எளிய துயில்நிலை உடையார். சீர்கெட்ட வாழ்க்கை முறையேனும், இயற்கைக்கு மாறுபட நிலைமை எதுவேனும் அதற்குக் காரணம் ஆகும். அவர் மருத்துவர்பாற் சென்று, தம் முடல் நிலையைச் சோதித்தறிதல் வேண்டும். தொழில் நெருக்கமும், ஆரவார இரைச்சலும் மிக்க இக் காலத்தில் வாழும் மாந்தர் மிகப்

பெரும்பாலோர் உறங்குதல் அரிது.

முன்னிரவில் துயில்வதால் ஆழ்ந்த துயிலும், புத்துயிர் அளிக்கும் இளைப்பாறுதலும் கிட்டும். பெரும்பான்மையோர்க்கு ஒழுங்கு முறையாய் இளைப்பாறும் நேரம் இல்லை. இரவில் மிகவும் பிந்திப் படுக்கப் போவதே அவர்க்கு வழக்கம். அன்னார் மார்க்குத் துவைன் வகுப்பிற் சேர்ந்தவர் போலும்! மார்க்குத் துவைன், "படுக்கையை அணுகுவதற்குத் தானும் எனக்குப் பயம் உண்டாகின்றது" என்றார். பலர் படுக்கையில் உயிர் துறந்தனராம்! பிந்திப் படுக்கப்போகும் வழக்கத்தினாலும், தூக்கம் வரும் பொழுது அதைத் தடுக்கின்ற பழக்கத்தினாலும், உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஓய்வை நாம் இழந்து போவதுமின்றி, பொதுவாக இயற்கை விதியின் படி நம்முடம்பில் அமைந்துள்ள அமைப்பு முறையையும் மழுக்கி, மந்தமாக்கிக் கெடுத்துவிடுகின்றோம். அதன்வழியே பெரும்பாலும் துயிலின்மை நோய் தலைகாட்டுகின்றது.

ஒழுங்கான துயிலே உகந்த உடல் நலம்

துயில்வதற்கு இன்றியமையாத செயல் ஒழுங்கு சிலர் எப்பொழுதும் பிந்திப் படுக்கப் போய், சில நாட்களில் தூக்கத்தை எட்டிப் பிடிக்க முயல்கின்றனர், ஆயின் ஒரு கிழமைக்குரிய ஓரே ஓய்வு நாளில் பதினைந்து மணி நேரம் தூங்குதலால், ஒழுங்கற்ற துயிற் கணக்கை இயற்கைப் பெயரேட்டில் அழித்துவிட முடியாது. இழந்து போன தூக்கத்திற்கு உடம்பு ஈடு செய்ய முயன்றாலும், அதை முற்றிலும் சரிக்கட்டிவிட முடியாது. "காலம் பெறப் படுத்துக் காலம் பெற எழுதல் நலமும், செல்வமும், ஞானமும் நல்கும்" என்று பெஞ்சமின் பிராங்கிலின் நூற்றைம்பது ஆண்டிற்கு முன்னரே நுவன்றருளிய நீதிமொழி இற்றை ஞான்றும் மெய்ம்மையே ஆகும். ஒழுங்காக நேரப்படப் படுக்கப்போகும் பழக்கம் உடல் நல வாணிக முறையில் உயர்ந்த ஊதியம் பயக்கும்.

துயில் நிலைக் குறிக்கோள்

ஓய்வினாற் பெரும் பயன் அடைய வேண்டுமாயின், துயிலும் நிலைமை வாய்ப்பாக அமைதல் வேண்டும். ஒலியும் இரைச்சலும் துயிலுக்குத் தடையாகி, துயிலுங்கால் தசையுணர்ச்சியைப் பெருகப்பண்ணுகின்றன. டிங் டாங் என மணி அடிப்பதும் பூம் பூம் என விசைவண்டி இரைவதும், புஸ் புஸ் என நீராவிப் பொறி உயிர்ப்பதும், பந்தய வண்டி பாய்ந்தோடுவதும் வானொலி செவிடு படமுழங்குவதும் முதலாய நகர வாழ்க்கையின் கம்பலை எல்லாம் ஓய்வைக் கெடுத்து உலைவு செய்வன.

சில வகை ஒலிகளை நீக்கிவிடலாம். அல்லது தடுத்துவிடலாம். ஆயினும், துயில்வோர் அவற்றை மனத்தினாற் புறக்கணித்து

ஒதுக்கி, உள்ளத்தில் அமைதியை நிலைநிறுத்தக் கற்றுக் கொள்ளல் வேண்டும். இருள் துயிலுக்கு உதவி. துயிலுமிடத்தில் விளக்கு இருத்தல்கூடாது. தெரு விளக்குகளின் ஒளியையும், முழுமதியின் சுடரையும், காலை ஞாயிற்றின் கதிரையும் தடுப்பதற்குத் தட்டியேனும் திரையேனும் இட்டுக் கொள்ளல் வேண்டும். வெது வெதுப்புள்ள சொகுசான படுக்கை அயர்ந்த துயிலை வரவழைக்கும். சுருள்வில்லும் மழமழப்பும், நடுத்தரமென்மையும், போதிய அகலமும், உறுதியும் உடைய மெத்தை மிக்க நலமுள்ளது. அதன் உறை ஈரமற்றதும் மெல்லியதும், வேண்டுமளவு விரிக்கக் கூடியவாறு சுற்றிலும் சுருக்கு அமைந்ததுமாய் இருத்தல் வேண்டும். ஒரு சிறு தலையணையும் வேண்டும்.

தூக்கம் வருவதற்கு உடல் கிடக்க வேண்டிய நிலை, முன்னரே கருதியவண்ணம், வயது வந்தவர்க்கு அத்துணை முதன்மையுடையதன்று. அதனை இயங்கும் படக்காட்சி வாயிலாய்க் காண்பித்துள்ளனர். தூங்கும் பொழுது வழக்கமாகக் கிடைக்கை நிலை அடிக்கடி மாறுகின்றது. ஓர் இரவில் முதன்முதற் கிடந்த கிடையை விட்டு, நாற்பது முறையாவது புரண்டு படுப்போம். ஒரே நிலையில் சில நிமிட நேரமட்டுமே கிடத்தல்கூடும். கையையும் காலையும் தாராளமாக நீட்டியும், முடக்கியும், வசதியாகக் கிடந்து தூங்குவதே முதன்மை சான்ற முறைமையாம்.

இளைப்பும், களைப்பும், அலுப்பும் நீங்குவதற்கு, வெட்ட வெளியில் படுத்துத் துயில்வதே தலைசிறந்தவழக்கம். சிறந்தகாற்றோட்டமுள்ள அறையில் துயில்வது தானும் திறந்த வெளியில் துயில்வதற்கு நிகராகாது. திறந்தவெளியிலாவது இல்லத்தின் முன்கூடத்திலாவது படுத்திருக்க வசதி இல்லாவிடின், இரவு முழுவதும் தாராளமாகக் காற்று வந்து உலாவும் பொருட்டு, படுக்கை அறையின் வாயில்களையும், சாளரங்களையும் விரிவாகத் திறந்து வைக்க வேண்டும்.

துயில் எவ்வாறு உண்டாகிறது?

துயில் உண்டாவதற்குக் குறிப்பிட்டுள்ள தலைசிறந்த குறிக்கோள் தானும் எப்பொழுதும் துயிலைக் கொண்டுவருவதன்று. ஏன் துயில்கின்றோம், எவ்வாறு துயில்கின்றோம் என்னும் வினாக்களுக்கு விஞ்ஞானம் இறுக்கும் விடைகள் எவர்கரும் மனநிறைவு அளிப்பன அல்ல. மூளையிற் குருதி மிக நிறைந்தாலும், மிகக் குறைந்தாலும்; துயில் உண்டாகின்றது என்பது குருதியோட்டக் கோட்பாடு. குருதிக் குழாய்களின் அமைப்பைத் தணிக்கை செய்கின்ற நரம்பு மண்டலம், நாளங்கள் விரிந்துபெரிதாகும் காரணத்தினால், குறிப்பிட்ட வேளைகளில் களைப்புற்றுச் சோர்ந்துபோகும் பொழுது துயில் உண்டாகின்

றது என்பது நரம்புத் தொகுதிக் கோட்பாடு. நோயை விளைவிக்கும் நஞ்சுகள் ஆங்காங்குக் குவிந்து விடுவதாலும், குருதியின் நிலைகள் மாறுதல் அடைவதாலும் துயில் உண்டாகின்றது என்பது இயல்பு நூற்கோட்பாடு. வட்டநிலையில் இயங்கும் இயற்கை முறைமைகள் அனைத்தும் செயலாற்றும் காலமும், ஓய்வுகொள்ளும் காலமும், தனித்தனி மாறுபடுவதால் துயில் உண்டாகின்றது என்பது உயிர் நூற்கோட்பாடு. குழந்தைப் பருவ நிலைக்குத் திரும்பும் அவாவினால் துயில் உண்டாகின்றது என்பது உள நூற்கோட்பாடு. இறுதியாக, ஆன்மாவானது ஊனுடற் கட்டுப்பாடுகடந்து வெளியேறி, சிறிதும் தட்டுத்தடை இன்றி இன்ப வுலகில் வட்டமிட்டு உலாவித் திரியும்பொழுது துயில் உண்டாகின்றது என்பது ஆன்மஞானக் கோட்பாடு. இந்த முறைமை முற்றிலும் தெளிவாய் வெளிப்படுமெனின், அது துயிலின்மை நோயைக் களைதற்குப் பெரிதும் உதவியாகும்.

துயிலின்மை நோய்

துயிலின்மை நோயை நீக்குவது பற்றிப் பற்பல வெளியீடுகள் தோன்றியுள்ளன. பல்வேறு நூல்கள் உலாவுகின்றன. பலரும் பலவகை முறைகள் கூறுகின்றார். இவற்றினால் அந்நோய் மிகுதியாகப் பரவி வருகின்றது என்பது புலனாகின்றது. துயிலிழந்தோர் பெரும்படை எங்கணும் வளர்ந்து வருகின்றது. அன்னார் அது பற்றி எப்பொழுதும் விவாதம் நிகழ்த்துகின்றார். அவருள் பெரும்பாலார் தம் களைப்பும் சலிப்பும் நீங்கத் துயில் மருந்து அருந்துகின்றார். ஆயின், அவர்க்கு அது நலம் பயப்பதன்று. அது உடல் நலத்திற்குக் கேடு விளைக்கின்றது. அக்கெட்ட பழக்கம் அவரைப் பேய்போல் பிடித்துக்கொள்ளுகின்றது. அது அவரை விட்டு நீங்குதல் அருமை. மருந்துண்ணும்பழக்கம் இயற்கை அறிவுரை முறையை ஏற்றுக்கொள்ள இடங்கொடாது. அது உள்ளத்தின் தெளிவையும் நேர்மையையும் ஒருங்கே கெடுத்துவிடும். துயிலின்மை நோயைத் தீர்ப்பதற்குப் பத்திரமும், தெளிவும், அறிவியற்கருத்திற் கியைந்ததுமாகிய வழி ஒன்றே உளது. அது யாதெனில், தவறான எண்ணத்தையும் கருத்தையும் களைந்து தகுந்த பழக்க வழக்கங்களைப் பொறுமையாகக் கடைப்பிடித்தலேயாம்.

துயிலின்மைக்குக் காரணங்கள் ஒருபால் உடற்குரியன, மறுபால் உள்ளத்திற்குரியன. உடற்குரிய காரணங்களில் குருதியோட்டத்தின் மாறுதல், மிதமிஞ்சிய உணவு, நரம்புமண்டல நோய், மட்டுக்கு மிஞ்சிய களைப்பு, எந்நிமித்தம் பற்றியும் உண்டாகும் நோவு, துயில் வசதிக் குறைவு முதலியன அடங்கும். ஓய்வும் உறக்கமும்வேண்டுமேல், அதற்கு முன் இவை இயற்கையாய் நீங்குதல் வேண்டும். உள்ளத்தில் எழும்பும் கிளர்ச்சியானது உடம்

பில் தோன்றும் கொடிய நோயி லும் பார்க்க உறக்கத்தைக் குலேத் துவிடும். பலர் பற்பல செய்தி களை நினைத்துப் பார்த்து ஆராய்ந்து முடிவு கட்டுதற்கு இர வுப் பொழுதை ஒதுக்கிவைக்கின் றனர். இருளும், அமைதியும், ஒரு முகப்பட்ட நினைவும், உள்ள வாறு நம் சிக்கல் வினுக்களை— பிரச்சினைகளை- வளர்த்துவிடவே உதவுகின்றன. அவ் வேளையில் அவை முன் எக்காலும் இல்லாத அளவில் அவ் வினுக்கள் தெளிவு பட விடாது, மனத்தைக் கலக்கி அச்சுறுத்துகின்றன. பகற்பொ ழுது உழைத்துக் களைத்துச்சோர் வுற்ற மூளை தள்ளாடி, நெறிதவறி இறந்த கால நிகழ்கால எதிர்கால நிகழ்ச்சிகளை நினைத்து, தாறுமா றுக எண்ணமிடத் தொடங்குகின் றது. வீட்டு நிலைமை பற்றியும் அடங்கி நடவாத மக்கள் பற்றி யும், பெருங்கவலை கொள்ளுகின் றது. அற்றைப் பகலிலும், அதற்குமுன் பல்லாண்டுகளிலும் செய்ததவறுகள்பற்றியும்வருந்திச் செய்யாதுவிட்ட செயல்கள் பற்றி யும் வருந்தி இரங்குகின்றது. அடுத்தநாள் எதிர்நிற்கும் கடமை களின் பெருக்கத்தைக் கண்டு அஞ்சுகின்றது. விரும்பத் தகாத நிலைமைகளை நினைத்து ஏங்குகின் றது· பொருளாதார நெருக்கம் பற்றித் திகைப்புறுகின்றது. உடல் நலம் குறித்து உளைகின் றது. குடும்ப நிலைமை கருதிக் குமுறுகின்றது. புகழ்கெடுவது பற்றிப் புழுங்குகின்றது. இங்ங னம் எண்ணுத எண்ணம்எல்லாம் எண்ணி எண்ணி ஏழை மனம் புண்ணுகின்றது. சலிப்பு மிகு கின்றது. ஓய்வில்லாமையால் உடல் தளர்ந்து, உணர்ச்சி குறைந்து, உயிரற்ற பிணம்போல் இயக்கம் மட்டுமே நிகழ்கின்றது. இந்நிலை எய்தினோர்க்குப் பசி இராது, மலச்சிக்கல் உண்டாகும். ஊக்கமும் ஆக்கமும் ஒழியும். அப்பால் செயற்கை முறையில் ஊக்கம் விளைக்க முயல்வார். காப்பி, தேயிலை, கஞ்சா, அபின் முதலிய கிளர்ச்சிப் பொருட்களை நாடுவார். பேதி மருந்துகளினால் பசியைத் தூண்டுவார். சோர்வை நீக்கும் பானங்களைப் பருகிச் சுறுசுறுப்பு அடைவார். புகை யிலைச் சுருட்டுப் பிடித்துப் புது அமைதி பெறுவார். தூக்க மருந் தினால் தூக்கத்தைவரவழைப்பார். இவ்வகைச் செயல்களின் பலனால் இறுதியில் நரம்புத் தளர்ச்சிக்கு இரையாவார். அன்றேல் தவருத வாழ்க்கையின் தண்டனையாக வருகின்ற எண்ணிறந்த நோய் களில் ஒன்றிற்குச் சிறந்த விருந் தாவார். இது வியப்பிற்குரிய தன்று.

துயில் வருவிக்க வழி

துயிலின்மையால் வருந்து வோர் துன்பத்தைத் தொலேக்க யாதானும் உதவிஉண்டோ? ஆம் உண்டு. ஆயின், விடாமுயற்சி வேண்டும். அடியிற்காணும் அறி வுரை அதற்கு உதவி ஆகும்.

1. உடம்பில் வியர்வை தோன் றிப் போதிய களைப்பு உண்டா கும் வரை உழைப்புத் தொழிற்

கண் ஈடுபடுதல்வேண்டும். களைப்புற்ற உடலும் உள்ளமுமே உள்ளவாறு ஒப்பற்ற துயில் மருந்து. பகற்பொழுதில் வருந்தி உழைத்த உழைப்பாளிக்கு இராப்பொழுதில் ஓய்வு அளிக்கும் இனிய துயில்போன்று நலம் பயக்கும் மருந்து வேறு யாதும் இல்லை. அது எவ்வகை அறிவுரையின் உதவியும், இயற்கை உணர்ச்சியைக் கெடுக்கும் எத்தகைய மருந்தின் துணையும் இல்லாது, இயல்பாகவே வலியத் தேடி வந்திடும். சில கிழமையேனும் கையில நகத்தில் அழுக்குப் படியாது செய்யும் அலுவலை விட்டு, உடம்பிற்கு நல்ல உழைப்புத் தருகின்ற வேலையைவிருப்பத்துடன்செய்க. அதனால் அயர்ந்த துயிலும், சிறந்த உடல் நலமும் கிட்டுகின்றனவா இல்லையா என்பதை ஆராய்ந்து காண்க

2. இயன்ற மட்டும் காற்றோட்டமுள்ள திறந்த வெளியில் வதிக.

3. இரவில் படுக்கப் போகுமுன்னமே நேரப்பட எளிய உணவு அருந்துக. அதனால் துயிலும் வேளையில் வயிறு தன் அலுவலைத் திறம்படச் செய்து முடிக்கும். இரவில் சிறிது உண்ணாவிடினும் குற்றம் இன்று! ஓய்வு பெறுதலே அதனினும் உடல் நலம் என்க. (சிறிது சூடான பானம் சிலர் உடம்பிற்குச் சிறந்த பயன் அளிப்பதாகும்.)

4. கிழமையில் ஆறு நாளேனும் காலம் பெற (இரவு ஒன்பது அல்லது பத்து மணிக்குள்) படுக்கைக்குச் செல்க.

5. முன்னரே கூறியுள்ள வண்ணம் துயில்வதற்குரிய சிறந்த வசதிகளைத் தேடிக்கொள்க.

6. குளிர் நடுக்கமுள்ள காலம் எனின், படுக்கப் போகுமுன் கால் அடிகளை வெந்நீர்க் கலத்துள்—பாத்திரத்துள்—வைத்து எடுத்தால் நலம். அல்லது வெது வெதுப்புள்ள நீரில் முழுகுதல் வேண்டும். அதனால் குருதியோட்டம் சமநிலை அடைந்து, உறக்கம் வருவதற்கு உதவியாகும்.

7. தசை அமைப்பு முழுவதையும் தளரவிடுக. உடம்பு, கழுத்து, தோள், கை, கால் அனைத்திலுமுள்ள தசைகள் அனைத்தையும் கூடிய அளவு நீட்டி இழுத்து, பின்பு ஒவ்வொன்றையும் தானாகவே தளருமாறு விட்டிடுக. ஒரு நிமிடத்திற்கு ஐந்து, ஆறு தடவை மெல்ல ஆழ்ந்து ஒழுங்காக மூச்சு வாங்குக. சுருளாமலும் உருளாமலும் படுக்கையில் அமர்ந்து கிடந்து, உடம்பு முழுவதையும் நெகிழவிடுக.

8. இனித் துயிலுதல் வேண்டும். அதற்காக நினைப்பினால் உடம்பு முழுவதையும் நெகிழச் செய்தல் வேண்டும். எல்லா வகை நச்சுக்களையும், கவலைகளையும், தொல்லைகளையும் நீக்கவேண்டும். சிலர் மின்னொளி போல் ஒரு நொடிப் பொழுதில் தம் நினைவை

மாற்றி, மனத்தை முற்றிலும் வெறுமையாக்க வல்லார். நம்மால் அவ்வாறு செய்ய இயலாவிடின், உள்ளத்திற்கு உவப்புள்ள யாதானுமொரு பொருளை நினைத்தல் வேண்டும. மீண்டும் அவ்வனுபவத்தை நுகரல் வேண்டும். இயற்கை அழகு சிறந்த இடத்தில் ஒருகால் தோன்றிய உவகைக் காட்சியை நினைக்கலாம். குழந்தைப் பருவத்தில் கண்ட ஓவியக் காட்சிகளை உள்ளத்தில் எழுதிப் பார்க்கலாம். இளமையில் எழுந்த உயர்ந்த நோக்கங்கள் நிறைவேறும் வழிகளை ஆராயலாம். இவ்வகை நினைவுகளும், திட்டங்களும் நம்மைத் துயிலுலகத்திற்குக் கொண்டு செல்ல வல்லன. ஆடு மாடுகளை எண்ணித் தொகையிடுதல், முன்னொருகால் கண்ணுற்ற எழில் சிறந்த காட்சி நலன்களை நினைத்துப் பார்த்தல், சிறந்த கருத்துள்ள செய்யுட்களை ஆய்தல், திருமறை மொழிகளை ஓதல், ஓரே எழுத்தில் தொடங்கும் பெயருடைய மலர்கள் விலங்குகள், பறவைகள், ஊர்திகள் முதலியவற்றை உற்றுணரல், சிக்கல் மிக்க கணக்கிற்குத் தீர்வு காணல் முதலியன, துயில் வருவிப்பதற்குப் பண்டை மக்கள் கையாண்ட பழக்கங்கள் என்ப. எவ்வாற்றானும் வருத்தமின்றிக் கருத்தைக் கவரவல்ல செயல்கள் அதற்கு உதவி ஆவன. எல்லாவற்றினும் மேலாக, இறைவர் உயிர்கள்மீது கொண்டுள்ள ஒப்புயர்வற்ற அன்பையும், கருணையையும் நினைத்து, எக்காலத்தும் தவறாத அவரது மெய்ஞ்ஞானத்திற்கும், திருவருட் செயலிற்கும், நம் பிரச்சினைகள் அனைத்தையும் கையடைத்து விடுதலே கைகண்ட முறைமை ஆகும்.

படுத்தவுடனே தூக்கம் வாராவிடின், அது பற்றிக் கவலை கொண்டு வருந்துதல் வேண்டாம். இரண்டு மணி நேரம் ஓய்ந்திருப்பது ஒரு மணி தூங்குவதற்கு நிகராகும். ஆதலால், அமைதியாய்ப் படுத்துக் கிடந்து, எந்த நிலைமையிலும் மனநிறைவுடனே மகிழ்ந்திருக்க உறுதி கொள்ள வேண்டும்.

இரவிற் பல மணி நேரம் துயில்வதுமன்றி, பகலிற் சிறிது நேரம் இளைப்பாறுவது மக்கள் அனைவர்க்கும் தேவை. தொழிற்சாலைகளில் இடையிடையே தொழிலாளிகட்குச் சிறிது நேரம் ஓய்வு கொடுப்பதால், அவர் தொழில் மிகத் திறமையாகவும், மிகுந்த அளவாகவும் நடைபெறுகின்றது என்று காண்கின்றோம். உழைப்பாளிகட்கு இடையிடையே சிறிது இளைப்பாறுதல் தேவை. களைப்புற்ற பிள்ளைத் தாய்ச்சியர் பிற்பகலில் இருபது நிமிடம் சிறு துயில் கொள்ளல் வேண்டும். மூளைத் திறனால் வேலை செய்யும் அலுவலாளர்க்கு ஓரே வகைப் போக்குடைய சலிப்புள்ள அலுவலகத் தொழிலின் நடுவண் சிறிது மாறுதல் தேவை.

துயிலின் அருமையையும் முதன்மையையும் புகழ் பெற்ற பிரஞ்சு மருத்துவர் ஒருவர் வற்புறுத்தி

யுள்ளார். அவர் சாகக் கிடக்கும் வேளையில், தம் தோழர் பக்கல் திரும்பி, அவரை நோக்கி, "நான் போகின்றேன். ஆயினும், எனக்குப் பின் மாபெரும் மருத்துவர் மூவரை உலகில் வைத்துப் போகின்றேன். அவர் யார் எனின், நீர், உணவு, துயில் என்பவரே" என்றார். ஒழுங்கு முறையாகவும், போதிய அளவாகவும் கொள்ளும் துயில் பெரு மருத்துவர்க்கு நிகர் என்பது வாய்மையே. அது களைத்துப் போன யாக்கைக்குப் புத்துயிர் தருகின்றது; இளைத்துப் போன தசைக்குப் புதிய ஊக்கம் நல்குகின்றது; உடற் சுரப்பிகளின் ஊற்றுகளைப் புதுக்குகின்றது; ஓய்ந்து தேய்ந்த செரிமான உறுப்புக்களை வலுப்படுத்துகின்றது; தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றுகின்றது; உழந்த நெஞ்சிற்கு அமைதி அளிக்கின்றது; துன்புற்ற உள்ளத்தை ஆற்றுகின்றது; பண்பற்ற குணத்தை இனிமை ஆக்குகின்றது. துயில் என்பான் "பெருந்தகைக் கள்வன்." அவன் பலகால் களவாடும் பழைய வலிமையையும், ஊக்கத்தையும் பத்து மடங்கு புதியன வாக்கிக் கைம்மாறு செய்வான்.

—நல்வழி

சமூக நூல்
பயிற்சிப் புத்தகம்

இயற்றியவர் :

T. S. உமாபதி, M. A., L. T., (Dip-in-Geog.)

6-ஆம் வகுப்பு	0	10	0
7-ஆம் வகுப்பு	0	10	0
8-ஆம் வகுப்பு	0	10	0

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

('ஆரம்பக் கல்வி' ஆபீஸ்)

94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை–1.

தப்புக் கணக்கு

(டாக்டர் ரத்தினவேலு சுப்பிரமணியம்.)

சிறு பிள்ளைகளாயிருந்தாலும் மனத்தைப பற்றிய வியாதி ஏற்படலாம். சிறுவர்கள், இரண்டு வயதுதானே என்று சொல்லி இவர்களுக்குக் கூடவா மனோ வியாதி ஏற்படும் என்று நினைத்து விடக் கூடாது. நோயாளியைப் பூராவும் பரிசோதனை செய்து விட்டு உடம்பில், அவயவங்களில் கோளாறு காணப்படாவிட்டால் மனோவியாகூலங்களால் வியாதி ஏற்பட்டிருக்கலாமோ என்பதைக் கவனிக்கவேண்டும்.

உதாரணமாக, சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன் நடந்த இச் சம்பவத்தைக் குறிக்கிறேன்.

நான் ஆஸ்பத்திரியில் புதிய கேஸ்கள் பார்க்கும் அறையில் உட்கார்ந்திருந்தேன், அப்போது ரமணா ரெட்டி என்பவர், மனைவி ரமணியம்மாள், மகன் சின்னா ரெட்டி இவர்களை அழைத்து வந்தார். நான் பார்த்தபோது சின்னா ரெட்டி தன் தாயார் இடுப்பில் இருந்தான். சாதாரண இயல்புள்ள ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் ரமணா ரெட்டி. அவருக்கு விவாகம் ஆகிப் பத்து ஆண்டுகள் கழித்து, ஸ்தல யாத்திரைகள் பல செய்து, விரதங்கள் பல அனுஷ்டித்துப் பிறந்த மகன் சின்னா ரெட்டி. ஆகவே வீட்டின் செல்லப்பிள்ளை யென்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. சக்திக்கு ஏற்றவாறு மிகுந்த சிரத்தையுடன் வளர்க்கப்பட்டு வந்தான்.

பையனுக்குச் சுமார் ஐந்து வயது ஆன பிறகு, பள்ளிக்கூடம் அனுப்ப வேண்டும் என்ற உத்தேசம் தோன்றியது ரமணா ரெட்டிக்கு. அதுவரை அவனைப் பிரிந்திருக்க வேண்டுமே என்ற எண்ணமே அவன் பெற்றோருக்கு ஏற்படவில்லை. வயது ஐந்து ஆன பின்னும் பள்ளிக்கூடம் அனுப்பாவிட்டால் ஆண் பிள்ளை எப்படிக் காலம் கழிக்க முடியும் என்ற உத்தேசத்தைக் கொண்டே அவனைப் பள்ளியில் வைத்தார்கள்.

முதல் தினம் இரவல் கார் வாங்கி, அதில் உட்கார வைத்து மேளதாளத்துடன் பள்ளிக்கு அழைத்துச் சென்றார்கள். சின்னா ரெட்டி வருகிறான் என்பதைக் கிராமத்து உபாத்தியாயர் எல்லோருக்கும் அறிவித்து, பள்ளியிலிருந்த எல்லாப் பிள்ளைகளுக்கும் மிட்டாய்த் தினுசுகள் வழங்கப்பட்டன. சின்னா ரெட்டியை அவன் பெற்றோர்கள் பள்ளிக்கூடம் அனுப்பி வைத்தார்கள். சின்னா ரெட்டி அன்றுதான் வீட்டைவிட்டு அவ்வளவு தூரம் சென்றிருந்தான். வீட்டுக்குள் இருந்தபடியே தெருவில் போகும் கார்களைக் கவனித்திருந்தான்.

ஆகவே காரில் உட்கார வைத்தவுடனேயே அவனுக்குப் பரம சந்தோஷம். அதிலும் பை நிரம்ப மிட்டாய்களையும் கொடுத்து, தன் வயதுடைய சிறுவர்களோடு அவனைக் கொண்டு போய் உட்கார வைத்ததும் அளவு கடந்த ஆனந்தம் அடைந்தான். முதல் தினமாதலால் மிக அன்புடன் இருந்தார் உபாத்தியாயர். ஒரு மணி நேரம் சென்றதும் அவனை வீட்டிற்கழைத்துச் சென்று விட்டார்கள்.

மறு தினத்திலிருந்து கார் இல்லாமல் நடந்தே போகவேண்டும் என்று அவன் தகப்பனார் சொல்லிவிட்டார். எனினும், பள்ளிக்கூடத்தில் தன் வயதுள்ள சிறுவர்களோடு ஓடி விளையாடும் உற்சாகத்தில் பள்ளிக்கூடத்திற்கு ஓடிவிட்டான் சின்னா ரெட்டி. அன்றும் சிரமம் இல்லாமல் கழிந்துவிட்டது.

சில நாட்கள் சென்றன. சின்னா ரெட்டிக்குப் பள்ளிக்கூடம் என்றாலே பிடிக்காமல் போய்விட்டது. காரணம், அவன் வகுப்பு உபாத்தியாயர் சின்னையா எப்பொழுதும் கையில் பிரம்புடனே தான் இருப்பார்! பையன் எவ்வளவு சிறிய தப்புச் செய்தாலும் முதலில் இரண்டடி கொடுத்துவிட்டுத்தான் பேச ஆரம்பிப்பார். ஆகவே அவரைக் கண்டாலே சின்னா ரெட்டிக்குச் சிம்ம சொப்பனம். உபாத்தியாயர் சின்னையா வருகிறார் என்றாலே அவன் சப்த நாடியும் ஒடுங்கிப் பெட்டிப் பாம்பு போல அடங்கிவிடுவான். சிறுவன்தானே?

ஒரு நாள் தன்னையுமறியாமல் பக்கத்துப் பையனோடு ஏதோ விளையாடிக்கொண்டிருக்கும் போது உபாத்தியாயருக்குக் கோபம் வந்து, சின்னா ரெட்டியைப் பிடித்துப் பளீர் பளீர் என்று கைப் பிரம்பினால் கையில் இரண்டடி கொடுத்துவிட்டார். உடனே பள்ளியிலேயே உட்கார மாட்டேன் என்று அழுது கொண்டே வீட்டிற்கு வந்தான். வீட்டிற்கு வரும்போது சிறிது அழுகை குறைந்தாலும், தன் தாயாரைக் கண்டவுடன் ஓவென்று அலறி அழுது கூக்குரவிட்டான்.

ரமணா ரெட்டி, "என்ன விஷயம்?" என்று கேட்டார்.

அழுவதை நிறுத்திவிட்டு, "காலில் வலிக்கிறது," என்றான் சின்னா ரெட்டி. உடனே பெற்றோர்கள் தங்களுக்குத் தெரிந்த கை வைத்தியங்கள் யாவும் செய்து பார்த்தார்கள். பயனில்லை. மறு நாள் காலையில் சின்னா ரெட்டி காலில் சக்தியில்லை; நடக்கமுடியாது, என்று சொல்லிப் படுத்துவிட்டான்.

அவர்கள் கிராமத்துக்கு அருகிலிருந்த டாக்டர் ஒருவரை அழைத்து வந்து காட்டினார்கள். அவர், "இது இளம்பிள்ளை பாரிச வாயுவாக இருக்கலாம். உடனே சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றால்தான் நல்

லது," என்று சொல்லி அவர்களைப் பயணப்படுத்திவிட்டார்.

ஆஸ்பத்திரியில் நான் இருந்த அறைக்கு வந்து சேர்ந்தனர். என்னிடம் ரமணு ரெட்டி, "பையன் பள்ளிக்கூடத்திலிருந்து விட்டிற்கு வந்தான். வந்ததிலிருந்து காலில் வலி என்று சொன்னுன். அதிலிருந்து, நடக்க முடியாமல் போய்விட்டது. ஜுரம் சிறிதேனும் ஏற்படவில்லை," என்று தெரிவித்துவிட்டு, "இளம்பிள்ளைப் பாரிசவாயு என்ருல் சிறிதேனும் ஜுரம் இருக்க வேண்டாமா" என்றும் என்னைக் கேட்டார்.

பையனைக் கீழே இறக்கிவிடும்படி அவன் தாயாரிடம் சொன்ஞல், தாயார் சம்மதிக்கவில்லை. "தரை ஜிலீர் என்று இருக்கிறதே? அவனுக்கு ஏற்கனவே கால் வரவில்லை. இன்னும் சுவாசப்பையில் ஏதாவது கெடுதல் ஏற்பட்டுவிடாதா தரை ஈரத்தினுல்?" என்று கேட்டார்கள்.

"அப்படியெல்லாம் ஏற்படாது. அவனுக்குக் கால்களில் எவ்வளவு சக்தி இருக்கிறது, நிற்கிருனு இல்லையா என்று பார்க்க வேண்டாமா?" என்றேன்.

அதற்கு அவர்கள் சம்மதித்து அவனைக் கீழே இறக்கிஞர்கள். சின்ன ரெட்டி சிறிது தயங்கி ஜாக்கிரதையாகக் கீழே விழுந்தான். அவன் விழுந்த பக்குவத்தைப் பார்த்தேன். உடம்பிற்கு ஒருவிதமான அடியும் ஏற்படாமல் ஜாக்கிரதையாகவே விழுந்தான். அதிலிருந்து அவனுக்கு நரம்பைப் பற்றிய வியாதி ஒன்றும் இருக்காது என்று அறிந்து கொண்டேன். பையனை என்னிடம் விட்டு விட்டு அவர்கள் தனியாக இருந்தால் அவனை நடக்கும்படி செய்வதாக உறுதியளித்தேன்.

என்னுடைய உறுதி மொழியைக் கேட்டு ரமணு ரெட்டிக்கும், ரமணியம்மாளுக்கும் எவ்வளவு சந்தோஷம் ஏற்பட்டாலும், "பையனை விட்டு நாங்கள் எப்படித் தனித்திருப்பது? அது முடியாத காரியம்." என்ருர்கள். "உங்கள் இருவரையும் வைத்துக் கொண்டு இச் சிறுவனை நடக்க வைப்பது என்பது முடியாது," என்றும் சொல்லிவிட்டேன். என்ன செய்வார்கள், பாவம்! பையன் நடக்கவேண்டும் என்ற ஆசையினுல் என் சொல்லுக்கு இணங்கிஞர்கள். அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். ஆனுல் விட்டிற்குச் செல்லவில்லை. பையன் இருந்த வார்டுக்குப் பக்கத்திலேயே இருந்தார்கள்.

வார்டில் சேர்ந்த பிறகு, பையனிடம், "நட!" என்று சொன்னேன். அதற்கு அவன், "நடக்க முடிந்தால் ஏன் இவ்வளவு தூரம் வரவேண்டும்? அது முடியாததால் தானே என்னை இவ்வளவு தூரம் அழைத்துவந்திருக்கிருர்கள்?" என்று சொல்லி விட்டான்.

வயது ஆறுகூட ஆகவில்லை. சிறுவன்! இவ்வளவு கண்டிப்பாகப்

பேசுகிறுனே என்று எண்ணிக் கொண்டு, அந்த வார்டு நர்ஸ் அம்மாளைக் கூப்பிட்டு, இதர சிறுவர்களுக்கு ஆகாரம் கொடுக்கும்படி சொன்னேன். சின்ன ரெட்டி தனக்கும் ஆகாரம் வேண்டும்; காலையில் எட்டுமணியிலிருந்து எதுவும் சாப்பிடவில்லை என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். அவனுக்கு மிகவும் பிடித்த பட்சணம் எது என்று தெரிந்து கொண்டு, அதை ஓர் ஆளிடம் வாங்கிவரச் சொன்னேன்.

அதை ஒரு தட்டில் வைத்து, மற்றச் சிறுவர்கள் இருக்கும் மேசை மீது வைத்துவிட்டு, "உனக்கு வேண்டுமானல் அங்கு சென்று எடுத்துக்கொள், அப்பா!" என்று சொல்லிவிட்டேன்.

ஐந்து நிமிடம் தயங்கினுன் பையன். இப்படியும் அப்படியும் புரண்டு பார்த்தான். நானே சிறிதும் தளர்ந்து கொடுக்கவில்லை. "எனக்குச் சிறிது ஒத்தாசை செய்தால் நான் நின்று பார்க்கிறேன்," என்றுன். "தாராளமாகச் செய்கிறேன்," என்று சொல்லி, கட்டிலிலிருந்து இறக்கிவிட்டு அவனைப் பிடிப்பது போல் நின்றுகொண்டேன். அவனும் நான் பிடித்துக்கொண்டிருக்கிறேனென்று நினைத்து நின்று கொண்டு நடக்க ஆரம்பித்தான். நான் அவனுக்குச் சிறிது பின்னதாகவே நடந்து சென்றேன். அவன் சுமார் பத்தடி போன பிறகு, நான் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு அவனைக் கூப்பிட்டேன். அப்பொழுது தான் சின்ன ரெட்டிக்குத் தெரிந்தது. நான் அவனுக்கு ஒத்தாசை செய்யாமலே நடக்க வைத்து விட்டேனென்று!

நடந்த சம்பவங்கள் பூராவையும் பார்த்துக்கொண்டிருந்த ரமண ரெட்டிக்கும் ரமணியம்மாளுக்கும் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஆனந்தக் கண்ணீர் பெருக்கினுர்கள். சின்ன ரெட்டியும் அவனுக்குப் பிடித்த பட்சணத்தைச் சாப்பிட்டு முடித்தான். பிறகு அவனை அழைத்து, "எதற்காக அப்படி நடக்காமல் படுத்திருந்தாய்?" என்று கேட்டேன். அவன் பள்ளியில் நடந்த சம்பவங்கள் பூராவையும் சொல்லி, "சின்னையா வாத்தியார் என்றுல் எனக்குப் பயமாக இருக்கிறது. நான் எப்படி அங்கே செல்லுவது?" என்று முறையிட்டான்.

உடனே ரமண ரெட்டியிடம், "பையனை அம்மா திரியான உபாத்தியாயரிடம் அனுப்பவேண்டாம். பக்குவமாகவும், முரட்டுத்தனம் இல்லாமல் ஆசையுடனும் அன்புடனும் கற்றுக்கொடுக்கும் உபாத்தியாயர்கள் உள்ள பள்ளிக்கூடமாகப் பார்த்துச் சேருங்கள் பையனை," என்று சொல்லியனுப்பினேன்.

— "குமுதம்."

நூறு ஆண்டுகளுக்குப்பின் மனித வாழ்க்கை !

ரஷ்யப் பேராசிரியர் யூரி பிரலோவ், 2059-ம் ஆண்டில் வாழப் போகும் மனிதனது வாழ்க்கைபற்றிய சில அதிசய விவரங்களை இங்கே எடுத்துரைக்கிறார் :

நாம் 2059-ம் ஆண்டில் வாழ்வதாக நினைத்துக்கொள்வோம். உடல் உழைப்பிற்கும் மூளை உழைப்பிற்குமிடையே எவ்விதமான எல்லைக் கோடுகளுமில்லாமற் போய்விட்டன. உடல், உள்ளம் இவை இரண்டிலும் மனிதன் முரண்பாடற்ற சீரான வளர்ச்சியடைவதற்கு வேண்டிய எல்லா நிலைமைகளும் ஏற்பட்டுவிட்டன.

பொருளாதாரத்தின் எல்லாப் பிரிவுகளிலுமே மனிதன் அணு சக்தியை உபயோகித்து வருகிறான்; இயற்கைச் சக்திகளை அடக்கியாளுகிறான். எனினும், மனிதனது உடல் வலிவும், ஆற்றலும் இதனால் குன்றிவிடவில்லை. நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட எல்லோரும் இப்பொழுது கூடுதலான வலிவும் வனப்பு முடையவர்களாக விளங்குகிறார்கள். எப்பொழுதும் முக மலர்ச்சியுடன் தோன்றுகிறார்கள். கவலையின்றி வாழ்கிறார்கள்...... அவர்கள் சாப்பிடும் ஆகாரம் பெரிதும் குறைந்துவிட்டது!

21-ம் நூற்றுண்டின் இரசாயன விஞ்ஞானிகள், மாவு சத்துக்களையும் (கார்போ ஹைட்ரேடுகள்), மற்றும் புரத சத்துக்களையுங்கூட செயற்கை முறையில் தயாரிப்பதற்கான முறைகளை வகுத்துவிட்டதால், பல புதிய சேர்க்கை உணவு வகைகள் இப்பொழுது உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை கூடுதலான சத்து அளிக்கின்றன. ரொட்டி அல்லது இறைச்சியைப்போல் வாய்க்கு இதமாகவும், சுவையாகவும் உள்ளன; அதே சமயத்தில் ரொட்டி அல்லது இறைச்சியைப் போலல்லாமல், பரிமாணத்தில் மிகவும் சிறியதாயும் உள்ளன. தண்ணீருக்குப் பதிலாக எல்லோரும் நீர் வாயுவின் சமனிகளில் ஒன்றான 'திரீயத்'தை மிகச் சொற்ப அளவுகளில் உட்கொள்ளுகிறார்கள். இதன் விளைவாக, மனிதனது செரிக்கும் உறுப்புகளின் செயல் முறைகள் அறவே மாறிப் போய்விட்டன. இந்த நீர்வாயு சமனி, மனிதனது உடலினுள் சத்துப் பொருள்கள் சிதைவுற்று மாறுவதைத் தூண்டிவிட்டுத் துரிதப்படுத்துகிறது.

21-ம் நூற்றுண்டு மக்கள் உயரமாக வளர்ந்து வாட்டசாட்ட

மான உடலமைப்புப் பெற்றிருப்பதற்கு இதுதான் காரணம்.

வயதான கிழவர்கள் உள்பட எல்லோரும் நோயின்றித் திடகாத்திரமாக இருக்கிறார்கள். நூறு வயதாகியும் தளர்ச்சியுறுவதில்லை. பழச் சாறுகளுடன், குறிப்பிட்ட அளவுகளில் எல்லோரும் கனநீர் அருந்துகிறார்கள்.

உடற்பயிற்சியிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் இளம் மக்களும், வயதான கிழவர்களும் ஆர்வமுடன் ஈடுபடுகிறார்கள்! எல்லா நகர்களும் சோலை நகர்களாக மாற்றப்பட்டுள்ளன. நரையுடையோரையோ, உடல் சோர்வுற்ற தள்ளாதவர்களையோ இந்நகர்களில் காண்பது அரிதாகிவிட்டது. எல்லோரும் தலை நிமிர்ந்து கம்பீரமாய் விறுவிறுப்புடன் நடக்கிறார்கள். அவர்களுடைய கண்களில் ஒளி வீசுகிறது. எல்லோரும் உடல் வனப்புடையவர்களாக விளங்குகிறார்கள்.

இந்த விறுவிறுப்பும் உடல் வலிவும் திடீரென்று தோன்றிவிடவில்லை. மக்களின் உடல் நலத்தை மேலோங்கச் செய்யும் பொருட்டு பலகாலம் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக ஏற்பட்ட நற்பலன்கள் இவை. முதுமையின் மூலகாரணங்களைக் கண்டுபிடித்து அவற்றை அகற்றும்பொருட்டு பல காலம் பாடுபட்டதன் விளைவுகள் இவை.

மக்களின் தோற்றத்தில் மட்டுமின்றி அவர்களுடைய அன்றாட வாழ்க்கையிலும் பல அதிசய மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. ஐம்புலன்களுக்குமுள்ள சக்தி அதிகமாகப் பெருகிவிட்டது. கண் பார்வை, பல அற்புத முறைகளில் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது. 20-வது நூற்றாண்டின் முடிவிலிருந்தே விஞ்ஞானிகள் மின்னணுக் கருவிகளையும், இதர பல கருவிகளையும் பயன்படுத்தி, மனிதனது கண்ணுக்குப் புலனாகக்கூடிய மின்காந்த அசைவுகளின் வீச்சை படிப்படியாக அதிகரிக்கச் செய்து, கண்ணின் ஆற்றலைப் பெருக்கிவந்துள்ளனர்!

மின்னணுக் கருவிகளைக் கொண்டு மனிதனுடைய கண் இப்பொழுது மையிருட்டினுள்ளும், சிவப்புக் கீழ்க் கதிர்களிலும் மற்றும் மிகக் குறுகிய புற-ஊதா கதிர்களிலுங்கூட தெளிவாகப் 'பார்க்கும்' ஆற்றலுடையதாகிவிட்டது! இயற்கையின் இரகசியங்கள் பலவும் வெளிப்படுத்தப்பட்டு விட்டன! பல இடைஞ்சல்களையும் கடந்து மனிதன் தன் பார்வையைச் செலுத்துவதற்குக் கற்றுக்கொண்டுவிட்டான்! எக்ஸ்-கிரணப் படங்களிலே காணப்படும் பொருள்களின் உள்ளமைப்புகளை மனிதனது கண் நேரடியாகப் பார்க்கும் திறனுடையதாகிவிட்டது!

ஒலி அசைவுகளின் அதிர்வை மின்காந்த முறையிலே குறைத்து

21-வது நூற்றாண்டு மனிதன் அவன் கண்ணுக்குப் புலப்படாத பல விவரங்களேயும் காதால் கேட்டு அறிந்து கொள்கிறான். உதாரணமாக — புல் எப்படி வளருகிறது, கண்ணாடியில் திரவம் எப்படி நகர்ந்து செல்கிறது, முறிந்த எலும்புகள் எப்படி திரும்பவும் இணைகின்றன — என்பன போன்ற பலவற்றையும் செவியால் கேட்டுணர்ந்து கொள்கிறான்!

இதேபோல், மனிதனது நாசியின் வாசனை நுகர்ச்சியும் பன்மடங்கு அபிவிருத்தியடைந்து விட்டது. பல்லாயிரக்கணக்கான வாசனைகளேயும் உணர்ந்து அறிவதுடன், வாசனையைக்கொண்டே பொருள்களின் வடிவங்களையும், பருமனையும் 21-வது நூற்றாண்டு மனிதன் நிர்ணயித்துவிடுகிறான்.

நுண் குற்றலைகள் மூலமாக வாசனைகள் பரவுகின்றன என்ற உண்மையைக் கண்டுபிடித்து வாசனைகளை 'தொலை வாசனைக் கருவிகள்' மூலம் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் அனுப்புவதற்கு மனிதன் கற்றுக்கொண்டு விட்டான். சினிமா, நாடக மன்றங்களிலும், வீடுகளிலும், தொழிற்சாலைகளிலும், ஆய்வுக் கூடங்களிலும் காற்று சுத்தமாக வைக்கப்படுவதுடன் நரம்புகளுக்கு நன்மை செய்யும் நறுமணங்களுடன் கமழும்படியும் செய்யப்படுகிறது!

—"நம் நாடு"

"ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

❋

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 3-50

ரிக்கார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1–25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–50

Form of Certificate of Income வருமான நற்சாட்சிப் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–50

தபால் செலவு பிரத்யேகம்

❋

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் அனுப்ப 25 பாரங்களுக்கு தபால் செலவு 14 n. p. 50 பாரங்களுக்கு 26 n.p. 75 பாரங்களுக்கு 41 n. p. 100 பாரங்களுக்கு 50 n. p.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

பொன் விளையும் பூமி!

[தொண்டைமான்]

"எந்த நாட்டிலே, தங்கமும், ரத்தினமும், பவழமும், வைரமணிகளும், மாணிக்கமும், மரகதக் கற்களும் விளைகின்றனவோ,—அந்நாட்டின் புகழ் உலகத்தின் எத்திசையிலும் மங்காமல் மறையாமல் ஒளிவிட்டுக்கொண்டிருக்கும்! அந்தப் பொன்னான பூமியிலே பிறந்தவர்கள் பாக்யசாலிகள்"—என்று ஐரோப்பிய அறிஞன் ஒருவன் எழுதியிருக்கிறான்!

தங்கம், முத்து, ரத்தினம், வைரம், வைடூரியம், மரகதம், பவழம், மாணிக்கம்—ஆகிய இவை—உலகைக் கவர்ந்த பொருள்கள்—உன்னதமான மின்னும் பொருள்கள் — விலை உயர்ந்த மதிப்பு மிக்க பொருள்கள்! மக்களின் மத்தியில்—உலகில்—இவை ஓர் உன்னதமான இடத்தைப் பெற்றுவிட்டன!

இவை அத்தனையும் கிடைக்கின்ற ஒரு நாட்டை, உலகத்தில் நாம் வேறெங்கும் காண முடியாது—ஆனால் நம் தாயகத்தில் கிடைக்கிறது — அத்தனையும் கிடைக்கிறது—ஆனால் இது ஓர் அடிமை நாடு!

தங்கம் — இவற்றில் தலைமையான பொருள்—உலகில் இன்றைய தினம் மிக மிகத் தேவையான, செல்வாக்குமிக்க பொருள்!

உலக நாணயமாற்றுகள் நடக்கிறதென்றால், அது தங்கத்தை அடிப்படையாக வைத்துத்தான்! உலக மார்க்கெட் இன்று இயங்குகிறதே—அதன் மூலாதாரமாக இருப்பது தங்கம். தங்கம் விலை ஏறினால் மற்ற பொருட்களின் விலை ஏறும்—மற்ற பொருள்களின் விலை குறைந்தால் தங்கத்தின் விலையும் குறையும்!

எந்த நாட்டில் தங்கம் அதிகம் விளைகிறதோ, அந்த நாட்டில் மற்ற நாட்டின் செல்வம் குவியும்.—செழிப்படையும்! இன்றைய உலகமே இதற்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது!

பழங்காலத்தில் தமிழ் பாடி மொழி வளர்த்த தமிழ்ப் புலவர்களுக்கு, தமிழகத்து மன்னர்கள் பொற்குவியல்களை வாரி வழங்கியிருக்கிறார்கள்; பண்பாடிய பாணர்கட்கு பொன்தாமரையையும், பண்ணுக்கேற்ற நடனமாடிய பாடினியார்க்கு பொன் மாலைகளையும் பரிசளித்திருக்கிறார்கள்; தங்கக் கிண்ணத்திலே மதுவருந்தியிருக்கிறார்கள்!

போர்க்களத்தில் போர் புரியும் போது, போர்வீரர்கள், தாம் எந்தப் படையைச் சேர்ந்தவர்கள் என்று பிறருக்குப் புரியும்படி, அடையாளச் சின்னமாக (பாட்ஜ்) 'பொன்மலர்'களை அணிந்திருந்தார்கள்! மக்களும் தங்கத்தால் நகைகள் செய்து அணிந்து அழகு பார்த்தார்கள்!

இடைக்காலத்தில் மதங்கள் புகுந்த பின்பு, மதக் கடவுள்களுக்கு தங்கத்திலே சிலைகள், ஆடைகள், ஆபரணங்கள் அமைக்கப்பட்டன. அதன்பின் அதே ஆண்டவர்களுக்கு தங்கத் தேர்களும், தங்க வாகனங்களும், தங்கப் பல்லக்குகளும் செய்து தரப்பட்டன.

தில்லையப்பனுக்கு தங்கத்திலே கூரை! தேசக் கடவுள்களுக்கெல்லாம் தினுசு, தினுசான நகைகள்! புரோகிதர்கட்கும், மடாதிபதிகளுக்கும் புதிய முறையில் பெரிய பொற்குவியல்கள்! — இப்படி நாடு, உலகம் மாறிக்கொண்டு வந்தது!

பல்லாயிரம் ஆண்டுகளாகவே தங்கம் நாணயமாகவும் அச்சிடப்பட்டு வந்தது—அதுவும் வளர்ந்தது—உலகில் தங்க 'மோகமும்' மக்களிடையே வளர்ந்தது! தங்கத்தின் தேவையும் வளர்ந்தது—விலையும் உயர்ந்தது.

இத்தனைக்குமே காரணம்—தங்கத்துக்கென்று இருக்கிற சில தனிப்பட்ட குணங்கள்தான்! தங்கம் அழகானது—கவர்ச்சி தருகிறது — பளபளப்பாக இருக்கிறது — மின்னுகிறது! அதை உருக்கலாம் — கருக்காது! ஆக்கலாம் — அழிக்கலாம் — மீண்டும் ஆக்கலாம் — ஆனால் அதன் தன்மை மாறிவிடாது! மற்ற உலோகங்களுக்கில்லாத இந்த இயல்புகள்தான் இதன் மதிப்புக்கே முக்கிய காரணம்!

தங்கம் எங்கெங்கு கிடைக்கிறது, தெரியுமா? உலகப் படத்தைப் பார்! உலகப் பொருளாதார நூல்களைப் புரட்டிப் பார்! ஆப்ரிக்காக் கண்டத்திலே ஜோகன்ஸ் பர்க் என்ற இடம்—அங்குதான் உலகில் அதிகமான தங்கம் கிடைக்கிறது. அடுத்தபடியாக ஆஸ்த்திரேலியாக் கண்டத்தில் விக்டோரியா மாகாணம், அமெரிக்காவிலே பிரேசில், இராக்கி மலைப் பிரதேசம்—ஆகிய பகுதிகளில்தான் அகப்படுகிறது தங்கம்! பிரிட்டனில் இல்லை—மற்ற பல உலக நாடுகளில் அதிகம் இல்லை—பாகிஸ்தானில் கிடையாது—இந்திய உபகண்டத்தில் டில்லியிலிருந்து—விந்தியம் வரை வட நாடு முழுவதும் தங்கம் இல்லை. (தாமோதர் பள்ளத்தாக்கிலாவது சிறிது தங்கம் கிடைக்காதா என்று டில்லி சர்க்கார் நாக்கை நீட்டிக்கொண்டுள்ளனர்.) விந்தியத்திற்குத் தெற்கே வந்து பாருங்கள்—வளமார் திராவிடத்தைப் பாருங்கள்—தங்க வயல்களைப் பாருங்கள்!

அதோ மைசூர்! அங்கே கோலார் தங்க வயல்களிலே தங்கக் கனிகள்—தங்கச் சுரங்கங்கள் பல காணப்படுகின்றன! இங்கே நான்கு சுரங்கங்கள் உண்டு!

இவ்வளவுதான் என்று நினைத்துவிடாதீர்கள்! இன்னும் உள்ளது. கோலார் தங்க வயல்களைத் தவிர தென்னாட்டில் வேறு தங்கக் கனிகள் இல்லையென்றே

பலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது தவறு! மிகப் பெரிய தவறு!

பெல்லாரி மாவட்டத்தில் சாந்தூர் பகுதிகளில் தங்கத் தாதுக்கள் நிறைய இருக்கின்றன! சுரங்கமும் உண்டு!

அனந்தப்பூர் மாவட்டத்தில்—அதிகமான அளவில் தங்கம் இருக்கிறது!

நீலகிரி, வயநாடு பீடபூமிகளிலும் தங்கம் கிடைக்கிறது; 1880ல் இங்கு ஒரு தொழிற்சாலையும் இருந்தது; அங்கே இப்போது தொழிற்சாலை இல்லை; ஆனால், 'ஜல கடுகு' என்ற ஒரு வகுப்பினர் ஆறு அல்லது கால்வாய்களின் படுகைகளில் உள்ள மண்ணை அரித்தே சிறிது, சிறிது தங்கத்தைச் சேகரித்துவிடுகின்றனர்! நீலகிரி மலையில் உள்ள 'குரும்பர்கள்' என்போர், ஆறுகளில் ஒதுங்கும் வண்டல் மண்ணை அரித்தும் சிறிது, தங்கத்தைச் சேகரிக்கிறார்கள் என்றால், அங்கெல்லாம் எவ்வளவு தங்கம் மறைந்து கிடக்கிறதென்று நினைக்கிறீர்கள்?

இவை மட்டுமல்ல. தமிழ் நாட்டின் மற்றும் பல பகுதிகளிலும் தங்கம் இருக்கவே செய்கிறது! ஆங்கிலேயர் காலத்தில், அரசாங்கத்தார் பூகர்ப்ப ஆராய்ச்சியை முழுவதும் நடத்தவில்லை. 1947க்குப் பின்னும் இந்த ஆராய்ச்சி சரியாக நடக்கவில்லை. 1948-53 இந்த இடைப்பட்ட ஐந்தாறு ஆண்டுகளில் மட்டுமே, அதுவும் பெரும்பாலும் வடநாட்டில் மட்டுமே பூதத்துவ ஆராய்ச்சி நடத்தப்பட்டிருப்பதாக—டில்லி மந்திரி ஒருவரே கூறியிருக்கிறார்!

தென்னாட்டிலே ஆராய்ச்சிகள் நடைபெறவில்லை, இன்னும். நடந்தால் இன்னும் எத்தனையோ உண்மைகளை, சுரங்கங்களைக் கண்டு பிடிக்கலாம்.

1953ல் மார்ச்சில், பத்திரிகைகளில் 'தமிழ் நாட்டின் கோலார்' என்று தண்டலை புதூர் (திருச்சி மாவட்டம்) பெயர் பெறலாம்!—தண்ணீரைத் தோண்டப் போய் தங்கத்தைக் கண்ட வரலாறு—என்றெல்லாம் பரபரப்பூட்டும் செய்திகள் வந்தன. அடுத்த சில தினங்களில் "அது தங்கமல்ல—மின்னும் இயல்புள்ள ஒருவகை மண்" என்று கலெக்டர் அறிக்கை விட்டார்! இதில் எது எவ்வளவு தூரம் உண்மையோ என்று எதிர்காலமே பதில் சொல்லும்!

பழங்காலத்தில், பழைய பல முறைகளில் தங்கம் தமிழ் நாட்டில் எடுக்கப்பட்டு வந்தது. ஆங்கிலேயர் வந்த பின்பு, அரசாங்கத்தின் நன்மைக்காகவும், ஆங்கில வியாபாரிகள் சிலரது சுய லாபத்துக்காகவுமே தங்கச் சுரங்கங்கள் புதிதாகத் தோன்ற ஆரம்பித்தன!

1875ல் லாவெல் (Lavelle) என்பவர் கோலாரில் முன்பு வெட்டிக் கிடந்த ஆழமற்ற சுரங்கங்களில் ஆழம் மிகுந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்து, வெட்டினார்.

1883ல் காப்டன் பிளம்மர் என்ற வணிகர் கோலாரில் தங்கக் கொடிகள் அதிகம் படர்ந்திருக்கும் ஒரு இடத்தைக் கண்டு பிடித்தார். அதன் பிறகுதான் இன்று நடக்கின்ற சாம்பியன்ரீப், மைசூர், நந்திதுர்க்கம், ஊர்காம்—ஆகிய சுரங்கங்கள் ஏற்பட்டு, தொழிற் சாலைகளும் அமைக்கப்பட்டன!

1902ல் கோலார் தங்கச் சுரங்கங்களுக்கு 92 மைலுக்கப்பாலிருந்து, சிவசமுத்திரம் நீர் வீழ்ச்சியிலிருந்து, மின்சாரம் கொண்டு வரப்பட்டது. எந்திரங்களை இயக்கி, விளக்கெரிக்கப்பட்டது. 1903ல் தரை மட்டத்துக்குக்கீழ் 3,000 அடிகள் வரை தோண்டப்பட்டு, தங்கப் பொடிகள் மேலே கொண்டு வரப்பட்டன; இப்போது சுரங்க ஆழம் 9,000 அடிகள் வரை போயிருக்கிறது.

இந்தச் சுரங்கங்களில் எந்திரங்களின் உதவியால், 9000 அடி வரை தொழிலாளர்கள்...ஆண், பெண் இருபாலாரும்—இறங்கி அங்கே மண்ணைக் குடைந்து, பாறைகளைப் பிளந்து, மண்ணை வெளியே அனுப்புகிறார்கள். பாறைகள் இடிந்து விழாதபடி மரக் கட்டைகளைக் கொண்டு முட்டுக் கொடுக்கிறார்கள். வெளியே கொண்டு வரப்பட்ட பாறைகளை எந்திரங்களால் இடித்துத் தூளாக்கி, தூளாக்கிய பொடிகளை பாதரசம், முதலிய ரசாயனப் பொருட்களோடு கலக்கிறார்கள். தங்கம் தனியாகவும், மண் ஒருபுறமும் பிரிகின்றன. இந்தத் தங்கத்தைப் பின்பு தூய்மையாக்கி, தங்கத் திரவத்தைக் கட்டியாக்கி, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.

சுரங்க வேலை மிகமிக ஆபத்தானது. சுரங்கத்தில் வேலை செய்யும்போது நீர்ப்பெருக்கு ஏற்படும். பாறைகள் இடிந்து தொழிலாளரை நசுக்கிக் கொன்று விடும். இதன் காரணமாகக் கண் இழந்தவர்கள், கால் கை முறிந்தோர், உயிர் துறந்தோர் தொகை கணக்கில்லை. தொழிலாளிகள் தென்னாட்டார். அதிலும் பெரும்பாலும் தமிழ் நாட்டைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர், தமிழ், தெலுங்கு, கன்னட மொழியினர்! எல்லாம் ஏழைத் தொழிலாளிகள். ஏழ்மையான நிலையில் இருந்தும் ஏற்றம் பெற முடியாதவர்கள்! சுமார் 20,000 (இருபது ஆயிரம் பேர்கள்!)

ஆண்டொன்றுக்கு 2 லட்சத்திலிருந்து 5 லட்சம் அவுன்ஸ் எடையுள்ள தங்கம் இச்சுரங்கத்திலிருந்து எடுக்கப்படுகிறது. சராசரி 7 கோடி ரூபாய் முதல் 15 கோடி ரூபாய் வரை இதன் மதிப்பு.

1953-ல் கீழ்க்கண்ட, நான்கு தங்க வயல்களிலும் எடுக்கப்பட்ட தங்கத்தின் அளவும் மதிப்பும் கீழே தரப்படுகிறது:—

எண்	கம்பெனி		அவுன்ஸ்	மதிப்பு ரூ.
1	மைசூர் தங்க வயல்	...	65,650	1·9 கோடி
2	சாம்பியன் ரீப் தங்க வயல்	...	72,360	2·1 ,,
3	நந்தி துர்கம் தங்க வயல்	...	53,840	1·6 ,,
4	ஊர்காம் தங்க வயல்	...	31,640	0·9 ,,
	மொத்தம்	...	2,23,490	6·5 கோடி ரூ.

துவங்கியது முதல் இதுவரை இந்தத் தங்க வயல்களில் சுமார் **500 கோடி** ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புள்ள தங்கம் கிடைத்திருக்கிறது; 150 கோடி ரூபாய்க்கு மேல் லாபம் கிடைக்கிறது. கோலார் சுரங்கத்தில் டன் ஒன்றுக்கு 8·93 பென்ஸ் தங்கமும், மைசூர் சுரங்கத்தில் டன்னுக்கு 7·22 பென்ஸ் தங்கமும், நந்தி துர்க்கம் சுரங்கத்தில் 5·71 பென்ஸ் தங்கமும் கிடைக்கிறது. மேலும் சில விவரங்கள் வருமாறு:—

1. ஒரே ஆண்டில் வெட்டி எடுக்கப்படும் தாதுப் பொருள், 7,43,800 டன்கள்.

2. தாதுப் பொருளில் எடுக்கப்படும் தங்கம் 2,23,590 அவுன்ஸ்.

3. தங்கத்தை விற்கும் விலை 6,50,00,000 ரூபாய்.

4. மைசூர் சர்க்காரின் உரிமைப் பங்கு (1952-ல்) 28,85,628 ரூபாய்.

5. டில்லி சர்க்காருக்குத் தரும் வருமான வரி 23,87,584 ரூபாய்.

1953 மே மாதத்திலிருந்து, ஊர்காம் சுரங்கக் கம்பெனியார் தங்களுக்குத் தினமும் 3000 ரூ. நட்டம் என்று காரணம் காட்டினார்கள். டில்லி சர்க்காருக்குத் தந்திகள் பறந்தன; சர்க்கார் ஒரு விசாரணைக் கமிட்டியை நியமித்தார்கள். இரண்டு வாரத்தில் கமிட்டியின் முடிவும், சிபாரிசும் வெளியானது.

“தங்கம் நிறைய இருக்கிறது. ஆனால் 9000 அடிக்குக் கீழ் இருக்கிறது, செலவு அதிகமாகிறது. விலை குறைகிறது. மத்ய சர்க்காரின் வரிப்பளு தாங்க முடியவில்லை” என்று சுரங்க டைரக்டர் கூறியிருக்கிறார்.

ஊர்காம் சுரங்கம் உலகிலேயே மிக ஆழமான தங்கச் சுரங்கம். 931 ஏக்கரில் அது அமைந்துள்ளது. 1888 முதல் அது துவங்கி நடந்து வந்தது. அதை நடத்தி

வந்தவர்கள் 'ஜான் டைலர் அண்டு சன்ஸ்' என்போர்.

1. இச்சுரங்கத்தில் போட்ட மூலதனம் 48 லட்ச ரூபாய்.

2. 1952 வரை கிடைத்துள்ள லாபம் 35 கோடி ரூபாய்.

3. வேலை செய்த தொழிலாளர் 3500 பேர்.

4. மொத்தம் வெட்டப்பட்ட தாது 78,00,000 டன்கள்.

5. எடுக்கப்பட்ட தங்கம் 40,50,000 கோடி அவுன்ஸ்.

6. தங்கத்தின் மொத்த மதிப்பு 50,00,00,000 கோடி ரூபாய்.

7. மைசூர் சர்க்கார் பெற்ற பங்கு 390 லட்சம் ரூபாய்.

8. பிரிட்டன் ஆட்சியில் வாங்கியது 2 கோடி ரூபாய்.

9. (1949-க்குப் பின் மூன்றாண்டில்) டில்லி சர்க்கார் பெற்ற வரி 12·42 லட்சம் ரூபாய்.

ஊர்காம் சுரங்கத்தில் மட்டுமே இவ்வளவு வருமானங்கள் இருந்ததென்றால், மற்ற மூன்று சுரங்கங்களிலும் எவ்வளவு கோடி வருமானம் வரும், வந்திருக்கிறது என்று நினைத்துப் பாருங்கள்!

—"தீப்பொறி"

உதிர்ந்த மலர்கள்

மேலே இருப்பவர்களைத் தங்கள் அளவுக்குக் கீழே இழுத்து விடுவதை எல்லோரும் விரும்புகிறார்கள். ஆனால் கீழே இருப்பவர்களைத் தங்கள் அளவுக்கு மேலே உயர்த்துவதைத்தான் எவருமே வெறுக்கிறார்கள்.

—சாமுவேல் ஜான்சன்

கடிகாரம் காலத்தைக் காட்டுகிறது மெய்தான். ஆனால் காலம் எதைக் காட்டுகிறது?

—வால்ட் விட்மன்

ஒவ்வோர் இனிப்பிலேயும் கொஞ்சம கசப்பு இருக்கிறது. ஒவ்வோர் கசப்பிலேயும் கொஞ்சம் இனிப்பு இருக்கிறது. இதனை மறப்பது வாழ்வையே மறப்பதாகும்.

—எமர்சன்

மலர்கள்! எழிலும் இனிமையும் தவழும் பொருள்கள்! அவைகளை நான் நிலவுலகு எனும் வானில் மிளிரும் நட்சத்திரங்கள் என்றே கருதுகிறேன். தவறா?

—லாங்பெல்லோ

The Association of The Managers of Aided Elementary Schools.

(CITY OF MADRAS)

A special General Body Meeting of the Association was held on Friday, the 16th January 1959 at 5 P M. at the premises of G. Rajamannar Chetty Elementary School, Madras-1 with Sri. Seshachalam in the chair.

The following resolutions were passed unanimously.

I. That while welcoming the Policy of Free Education enunciated in G. O. 1976 Education dated 30-11-1958 and covered by the Proceedings of the Director of Public Instruction, R. O. C. No. 940-B7/58 dated 5-12-1958, this Association feels that on the basis of the terms of grant mentioned in the G.O., it will be definitely out of question for the managements to run their Schools.

II. That if the Government feels that private Managements have rendered signal service to the cause of primary education in our State and that their services could therefore be properly and fully utilised hereafter also, then this Association feels that the managements can run their Institutions only on the following basis :—

(a) In addition to the Teaching Grant and the Dearness Allowance that is now in force, the Managements should be paid compensation for the loss of fee income on all children of Standards I to V (whether unable or able, poor or rich) at the revised standard rates of As 8/-, As. 10/-, As. 12/-, As. 14/- and Re. 1/- to enable them to meet (1) Rent, (2) Excess salary paid to Teachers over and above the Teaching grant, (3) Salary and Dearness Allowance to Menial Staff like peons, conductresses, sweepers and scavengers, (4) Provident Fund contribution, (5) Repairs to Furniture, (6) Stationery and printing, (7) Supervision charges and (8) Contingencies, or.

(b) In the alternative, in addition to the present teaching grant and Dearness Allowance which is payable exclusively to the Teachers, the Managers should be paid the actual rent they are now paying plus a fixed consolidated monthly grant at 30% on the assessed grant to cover the items 2 to 8 mentioned in Resolution II (a).

(c) That in the case of own buildings, the Managements be paid the actual rates and taxes together with a fixed sum to cover the cost of annual repairs, in addition to the Teaching Grant, Dearness Allowance and fixed consolidated monthly grant at 30% on the assessed grant.

III. That as the issues involved are serious and complicated and require a calm and careful study and as sufficient time to evolve a satisfactory formulae is required for all interested in carrying out the Government's policy, this Association is of opinion that the consideration of the G. O. may be deferred till 1960-61.

IV. That the following Representatives of the Association do wait upon the Honourable Chief Minister, the Honourable Education Minister and the Secretary to the Government's Education Department and impress upon them the considered views of the Association on this question :—

(1) Sri P. Veeraraghavan, (2) Srimathi Indrani Chengalvarayan, (3) Miss G. Rajendran, (4) Sri Mayandi Nadar, M.L.A., (5) Sri V. Sundaramurthy Chetty, M. C., (6) Sri A. R. Seshachalam. (7) Sri J. Muthukrishnan, (8) Sri T. Ramanujam, B. A. B. L. and (9) Sri G. A. Appan.

V. That the copies of the above Resolutions be communicated to all and be released to the Press.

A. R. SESHACHALAM,
Chairman.
16-1-59.

சென்னை நகர எயிடட் பள்ளி நிர்வாகிகள் சங்கம்

16—1—59 மாலை 5 மணிக்கு மேற்படி சங்கத்தின் கூட்டம் G.R.C. ஆரம்பப் பாடசாலையில் கூடியது. திரு. A. R. சேஷாசலம் அவர்கள் தலைமை வகித்தார். கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன :-

1. எயிடட் ஆரம்பப் பாடசாலைகளில் பிள்ளைகளிடம் சம்பளம் வசூலிக்காமல் பாடசாலை நடத்தும்படியான G. O. No. 2684 (29—11—58) உத்தரவில் கண்டுள்ள ஷரத்துப்படி 1—6—59 முதல் பாடசாலைகளை நடத்த முடியாமல் மூடவேண்டிய நிலை ஏற்படுமென்று, இச்சங்கம் மிக வருத்தத்தோடு எடுத்துக் காட்டுகிறது. இதனால் சுமார் 200 பாடசாலைகள் சென்னையில் பாதிக்கப்படுகின்றன.

2. பாடசாலைகளைத் தொடர்ந்து நடத்தவேண்டுமானால் அரசாங்கம் முதல் வகுப்புக்கு 8 அணா, இரண்டாம் வகுப்புக்கு 10 அணா, மூன்றும் வகுப்புக்கு 12 அணா, நான்காம் வகுப்புக்கு 14 அணா, ஐந்தாம் வகுப்புக்கு ஒரு ரூபாய் விதம் பிள்ளைகளுக்குச் சம்பள நஷ்ட ஈடு மாதா மாதம் கொடுக்கப்பட வேண்டும். அப்படி கொடுத்தால்,

(1) கட்டட வாடகை,

(2) ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டுவரும் அதிகச் சம்பளம்,

(3) பாடசாலை ஆயாக்கள், குப்பை கூட்டுவோர் முதலியவர்கள் செலவுகள்,

(4) ஆசிரியர்கள் பிராவிடண்டு பண்டுக்காக மேனேஜர்கள் கொடுக்கவேண்டிய தொகை,

(5) பெஞ்சு நாற்காலிகள் வாங்குதல், ரிப்பேர் செய்தல்,

(6) படங்கள் எழுத காகிதச் செலவு, சாக்பீஸ் செலவு,

(7) பாடசாலை கண்காணிப்பதற்கான செலவு,

(8) விழாக் கொண்டாட்டம் முதலிய செலவுகள், மற்றும் பல செலவுகள்,

—இவைகளை ஈடு செய்ய முடியும்.

3. அது சாத்தியமில்லையானால், பாடசாலைகளுக்குக் கொடுக்க வேண்டிய கட்டட வாடகைகளைக் கொடுத்துவிட்டு, மாதா மாதம் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் (Assessed Grant) ஆசிரியர் கிராண்டில் 30 சதவீதம் (Maintenance Grant) நிர்வாகக் கிராண்டாக அரசாங்கத்தார் உயர்த்திக் கொடுக்கவேண்டும்.

4. சொந்த கட்டடங்கள் இருக்கும் பாடசாலைகளில், பாடசாலைகளுக்குக் கொடுக்க வேண்டிய முனிசிபல் வரி, கட்டட ரிப்பேர் செலவு—இவைகளுக்கு ஏற்படும் தொகையோடு 30% நிர்வாகக் கிராண்ட் (Maintenance Grant) கொடுக்கப்படவேண்டும்.

5. இந்த அரசாங்க உத்தரவு மிக்க சிக்கலானதாக இருப்பதாலும், இவைகளை நன்றாகப் பரிசீலனை செய்யப் போதிய காலம் அரசாங்கத்திற்கும், நிர்வாகிகளுக்கும் அவசியம் என்றும், இதை இவ்வருடம் பரிசீலனைசெய்து நல்லதோர் முடிவிற்கு வந்த பிறகு, இந்த உத்தரவை 1960—61 ஆம் ஆண்டுக்குக் கொண்டுவருவது நலம் என்றும் இச்சங்கம் கருதுகிறது.

6. கீழ்க்கண்ட அங்கத்தினர்கள் கொண்ட ஒரு தூதுக் குழு, கனம் கல்வி மந்திரி, கனம் பிரதம மந்திரி, கல்வி இலாகா அதிகாரிகள் இவர்களைப் பேட்டி கண்டு ஆவன செய்யும்படி இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது :—

1. திரு. P. வீரராகவன் (ஆசிரியர் : 'ஆரம்பக்கல்வி')
2. திருமதி இந்திராணி செங்கல்வராயன்,
3. மிஸ். G. இராஜேந்திரன்,
4. திரு. மாயாண்டி நாடார், M. L. A.,
5. திரு. V. சுந்தரமூர்த்தி செட்டி, M. C.,
6. திரு. A. R. சேஷாசலம்,
7. திரு. J. முத்துகிருஷ்ணன்,
8. திரு. T. இராமானுஜம், B. A. B. L.,
9. திரு. G. A. அப்பன்.

A. R. சேஷாசலம்,
தலைவர்.

பழனி தாலுகா எயிடட் பள்ளி நிர்வாகிகள், ஆசிரிய நிர்வாகிகள் சங்கம்

21-12-58ல் நிறைவேற்றிய தீர்மானங்கள்

---

1. மார்ச்சு மாதம் பரீட்சை எழுதிய ஆசிரியர்கள் உடனடியாக ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டால் சீனியர் கிரேடு [or] செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருந்தாலும் ஜூனியர் கிரேடு [or] ஹையர் கிரேடு ஆசிரியர்களாக இருந்தாலும் தேர்வு பெற்றார் என்று தெரிந்த பின் பரீட்சை எழுதிய கடைசி தினத்திலிருந்து அவர்கள் அந்தந்த கிரேடுக்குள்ள சம்பளத்தைப் பெறுவதற்கு தகுதி உடையவர்களென கருதப்பட்டு கிராண்டும் இதுவரை அனுமதிக்கப்பட்டு வந்தது.

லோயர் எலிமெண்டரி பள்ளிகளில் 1-4-58-க்கு முன் நியமிக்கப்பட்ட செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு 45-2-85 வீதம் கிராண்டு அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆதலால் 1958 மார்ச்சில் சீனியர் கிரேடு பரீட்சை எழுதிவிட்டு வந்த ஆசிரியர்கள் பரீட்சையில் தேர்வு பெற்றால் 28-3-58 முதல் 45-2-85+ 5 என்ற விகிதத்தில் சம்பளமும் ரூ. 29 பஞ்சப்படியும் கொடுக்கப்படும் என்ற நிபந்தனையின் பேரில் நியமிக்கப்பட்டு நாளது மாதம் வரை அந்த விகிதப்படி சம்பளமும் பெற்று வந்துள்ளனர்.

R.O.C. No. 1548 B 7/58 dated 2-10-58-ம் தேதி வெளியான Directors' proceedings-ல் query No. 9-க்கு கொடுக்கப்பட்ட பதிலில் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் 1958 மார்ச்சில் பரீட்சை எழுதி தேர்ச்சி பெற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 45-2-85 என்ற சம்பள விகிதம் பெற தகுதியற்றவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அந்த விதியை அடிப்படையாக வைத்துக்கொண்டு 58 மார்ச்சில் வெளிவந்த சீனியர் கிரேடு ஆசிரியர்களும் 28-3-58 முதல் 31-3-58-க்குள் நியமனம் பெற்று மேலே குறிப்பிட்டுள்ள விதிப்படி நாளது தேதிவரை மானேஜ்மெண்டாரிடம் செக்கண்டரி கிரேடு ஆசிரியர்க்குரிய சம்பளமும் பெற்று சம்பளப் பட்டியில் கையொப்பம் இட்டு வந்துள்ள ஆசிரியர்களும் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்குரிய கிராண்டு மட்டும் பெறத் தகுதி உடையவர்கள் என கல்வி அதிகாரிகள் கருதுகின்றார்கள். ஹையர் கிரேடு ஆசிரியர்கள் பரீட்சை எழுதிய தேதிக்கு அடுத்த தேதி முதல் ஹையர் கிரேடுக்குரிய சம்பளம் பெறத் தகுதியுடையவர்களெனக் கருதப்பட்டு வருவது போல, செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும்

28-3-58 முதல் 31-3-58 தேதிக்குள் நியமனம் பெற்றுள்ள செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் சம்பளம் 45-2-85+5 என்ற விகிதத்தில் பெற அனுமதித்து, ஆசிரியர்களும், பள்ளி நிர்வாகிகளும் நஷ்டத்திற்கு உள்ளாகாதபடி உதவி செய்ய வேண்டுமாய் கனம் கல்வி இலாகா டைரெக்டர் அவர்களையும், கல்வியதிகாரிகளையும் இச்சங்கம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறது.

2. செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு சம்பள விகிதம் 45–2–85 என்ற விகிதத்தில் நிர்ணயிக்கப்பட்டிருப்பது போல ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதம் நிர்ணயிக்கும்படி இச்சங்கம் மாட்சிமை தங்கிய மந்திரியவர்களையும் கல்வி அதிகாரிகளையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறது.

3. எயிடெட் பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் சாங்ஷன் செய்யும்படி இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

4. பள்ளி நிர்வாகச் செலவு, பொருள்களின் விலை உயர்வால் முன்னை விட அதிகமாகச் செலவாவதால் குறைந்தது 25 சத வீதமாவது நிர்வாகக் கிராண்டு சாங்ஷன் செய்யும்படி இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

5. ஆசிரியர்களுக்கு $33\frac{1}{3}$ சத வீதமாவது பென்ஷன் வழங்கும்படி சர்க்காருக்கு சிபார்சு செய்யுமாறு மாட்சிமை தங்கிய கல்வி மந்திரி அவர்களையும், கனம் கல்வி அதிகாரியையும் இச்சங்கம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறது.

6. திருத்தப்பட்ட சராசரி ஆஜர் விகிதப்படி ஒரு ஆசிரியருக்குச் சராசரி ஆஜர் 35 இருக்கவேண்டுமென சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளது. ஓர் ஆசிரியர் சராசரி ஆஜர் 35 உள்ள ஆரம்ப வகுப்புக்களுக்குத் திறம்படப் போதித்து நல்ல தேர்ச்சி காட்ட முடியாதாகையால் ஒரு ஆசிரியருக்குச் சராசரி ஆஜர் 25 ஆக இருக்கும்படி உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் இச்சங்கம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறது.

7. ஒவ்வொரு வருடமும் Final Grant கணக்கிடுவதற்கு டிசம்பர் மாதக் கிராண்டை மட்டும் பிடித்து வைத்துக்கொண்டு நவம்பர் மாதக் கிராண்டு முழுவதையும் கொடுத்துதவும்படி இச்சங்கம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறது.

8. பழனித் தாலுகாவைச் சேர்ந்த பெரும் பள்ளம் என்னும் கிராமம் கொடைக்கானல் தாலுகாவிலுள்ள கொடைக்கானல் மலைக்

கருகிலுள்ள மலைமீது உள்ளது. இம்மலைப் பிரதேசம் பழனி தாலுகாவைச் சேர்ந்தது எனப் பிரிக்கப்பட்டுள்ள காரணத்தால் கொடைக்கானல் தாலுகாவிலுள்ள ஆசிரியர்களுக்கு Hill allowancc கொடுக்கப்பட்டு வருவது போல் கொடைக்கானல் மலையையொட்டியுள்ள பழனி தாலுகாவைச் சேர்ந்த பெரும் பள்ளம் என்னும் கிராமத்திலுள்ள ஆசிரியர்களுக்கு Hill allowance கொடுக்கப்படவில்லை.

ஆகையால் கொடைக்கானல் மலையிலுள்ள ஆசிரியர்களுக்கு Hill allowance கொடுக்கப்பட்டு வருவது போல், பழனி தாலுகாவைச் சேர்ந்த பெரும் பள்ளம் மலைப் பிரதேசத்திலுள்ள ஆசிரியர்களுக்கும் Hill allowance கொடுக்கும்படி இச்சங்கம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றது.

ரா. நாராயணசாமி
காரியதரிசி.

S. டேவிட் பாண்டியன்
தலைவர்.

உதிர்ந்த மலர்கள்

எட்ட இருப்பதை எண்ணி ஏங்கிக் கிட்ட இருப்பதை விட்டு விடாதே.

—யூரிபிடஸ்

உழைப்பு எந்த மனிதனையும் அவமானப் படுத்துவதில்லை. ஆனால் சில சமயங்களில் மனிதன்தான் உழைப்பை அவமானப் படுத்திவிடுகிறான்.

—யுலிசஸ் கிரான்ட்

வறுமை — ஆம்—அதுதான் எல்லாக் குற்றங்களுக்கும் அன்னை. எல்லாப் புரட்சிகளுக்கும் தாய்.

—அரிஸ்டாடல்

என்னால் எல்லாவற்றையும் செய்ய முடியாமல் இருக்கலாம். ஆனால் என்னால் சிலவற்றைச் செய்யமுடியுமே! என்னால் எல்லாவற்றையும் செய்ய முடியாது என்பதற்காக என்னால் முடிந்ததைக்கூட ஏன் செய்யாமல் இருக்கவேண்டும்?

—எவரட் ஏல்

விடுதலை வீரன் ரிசால்

(மு. கோதண்டன்.)

பிலிப்பைன் நாடு இயற்கை வளம் நிறைந்த நாடு. உழைக்கும் நல்வீரர்கள் உலவும் நாடு. அன்று வெள்ளையர் தம் அடிமைக் காடாய் இருப்பதை நினைக்கவே முடியவில்லை அவனால்! சோகமும் கோபமும் பீறிட்டெழ 'அம்மா' வென்றோடினான் ரிசால்! 'என்ன மகனே!' என்று அன்போடு கேட்டாள் அவன் தாய். 'நாம் வாழும் இந்தப் பிலிப்பைன் நாடு, நமது நாடுதானே அம்மா என்றான். 'ஆமாண்டா, கண்ணே!' என்றாள் அன்னை. 'பின் ஏனம்மா நம் நாட்டை அந்நியரான வெள்ளையர் ஆள்கிறார்கள்' என்று ஆத்திரத்தோடு கேட்டான் ரிசால். 'நம் நாட்டைப் போரிலே வென்று விட்டார்களாம் ஒரு காலத்தில் வெள்ளையர்கள். இன்று நம்நாடு சுதந்திர நாடல்ல கண்ணே! அடிமை நாடு! அடிமை நாடு!!' என்று ஆவேசமாய்க் கூறினாள் அவள். 'அம்மா! அடிமை வாழ்வை அகற்றுவேன், அந்நியரை விரட்டுவேன்!' என்று வீரமுழக்கமிட்டான் ரிசால். 'கண்ணே நீ இன்று சிறியவன்! நாளை பெரியவனானால் செய்வாய்!' என்று அன்போடு மார்பில் அணைத்துக் கொண்டாள் தன் அன்பு மகனை!

1861-ம் ஆண்டு ஜூன் மாதம் 19-ம் தேதி ஓர் புகழ்பெற்ற வீரக் குடும்பத்தில் பிறந்தான் ஜோசி ரிசால்! அவன் தாய் ஒரு சிறந்த கவியரசி. நாட்டு உணர்ச்சியைத் தூண்டும் உயர்ந்த கவிதைகளை எழுதும் ஆற்றல் பெற்றவள். அவன் தந்தை ஓர் புகழ்பெற்ற அறிஞன்.

ரிசால் இயற்கையில் எதையும் ஆழ்ந்து நோக்கும் சிந்தனைத் தெளிவும், எதையும் கூர்ந்து கவனிக்கும் உயர்ந்த அறிவும், நினைத்ததைச் செய்து முடிக்கும் போராற்றலும் உடையவன். அப்பொழுது பிலிப்பைன் ஸ்பானியர் என்னும் வெள்ளையரது அடிமை நாடாய் இருந்தது. தன் நாட்டின் பொன்னும் பொருளும் அந்நியரால் சுரண்டப்படுவதையும், அதனால் தன் நாட்டவர் வறுமையிலிருந்து மீளாமல் செத்துக் கொண்டிருப்பதையும், ஸ்பானிய அதிகாரிகள் செய்யும் கொடுமையையும் எண்ணி எண்ணி மனம் புழுங்கிக்கொண்டிருந்தான். அப்போது ரிசாலுக்கு பதினொரு வயது. ஆயினும் தன் தாய் எழுதிக்கொடுக்கும் தேசிய எழுச்சிமிக்க பாடல்களை, இனிமையாகப் பாடும் ஆற்றல் பெற்று இருந்தான். தானே வீரமிக்க கவிதைகளை இயற்றும் அறிவும் பெற்றிருந்தான். தான் எழுதிய கவிதைகளைத் தன் நண்பர்களிடம் இனிய இசையோடு உணர்ச்சி

பொங்க அழகாகப் பாடிக் காட்டு வான்!

ஸ்பானிய ஆட்சியைக் கவிழ்க்க பிலிப்பைன் மக்களைத் தூண்டிய தாகக் குற்றஞ் சுமத்தி ரிசாலின் தந்தையைச் சிறையில் அடைத்தனர் ஸ்பானியர். நாட்டுணர்ச்சியைத் தூண்டும் புரட்சிக் கவிதைகளை இயற்றுபதாகக் கூறி அவனது தாயையும் சிறையில் பூட்டினர். ரிசால் தணலில் விழுந்த புழுவெனத் துடித்தான்! அலையிலகப்பட்ட துரும்பெனத் தவித்தான்! செய்வதொன்றும் புரியாது விழித்தான். இது போன்ற அதிர்ச்சிகளை அவன் இதுவரையில் தாங்கியதில்லை. அந்நியரின் செயல் கண்டு ஆத்திரம் எய்தியது அவனுள்ளம். சூதுக்காரர்களைச் சும்மாவிடுவதா என்று துடிதுடித்தான். தன்னந் தனியாகத் தான் ஒருவன் மட்டும் எதிர்த்தால் நாட்டிற்கு நம்மால் நன்மை ஏதாகிலும் பயக்குமா என்று யோசித்தான். 'இன்றைய நிலையில் உருவான பயன் ஏதும் ஏற்படாது. நாட்டுணர்ச்சியைத் தூண்ட வேண்டும்; நானிலம் புகழும் கல்லறிவு பெறவேண்டும். பாரங்கியரே அதிசயிக்கும்படி படித்துப் பட்டம் பெறவேண்டும். பிலிப்பைன் நாட்டைப்பற்றிப் பாரறியச் செய்யவேண்டும்' என்று எண்ணினான். எண்ணிய படி செயல்படவும் தொடங்கினான்!

ஆண்டுகள் சில கழிந்தன! ரிசால் மணிலாக் கல்லூரியில் ஊக்கமுடன் படித்துக்கொண்டிருந்தான்! அப்போது சிறையிலிருந்து விடுதலை அடைந்தாள் அவன் அன்னை. தன் மகனின் அறிவு வளர்ச்சியும், நாட்டு உணர்ச்சியும் கண்டு அவனது தாய் புத்துணர்ச்சி பெற்றவளாய் புளகாங்கிதமடைந்து அவனைக் கட்டி அணைத்துக்கொண்டாள்.

"மகனே! நீ நன்கு படிப்பாய்; நாடு விடுதலைபெற உழைப்பாய்; என்று ஒவ்வொரு விநாடியும் சிறையிலிருக்கும்போது நினைத்துக்கொண்டிருந்தேன். அந்த நினைப்பு வீண்போகவில்லை கண்ணே, நீ முதலில் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க வேண்டும்! பட்டம் பெறவேண்டும்; பார் புகழவேண்டும்! உன்னால் இந்நாடு விடுதலை அடைய வேண்டும்; அன்னையின் கைவிலங்கு அறுபடவேண்டும்!"

"அன்னையே! அன்னை நாடு அடிமை நாடு என்பதை ஒவ்வொரு நிமிடமும் நினைக்காமல் இருப்பதில்லை. இந்நாட்டவர் வாழ இயற்கை வளமெல்லாம் தந்தாள் என் அன்னை. இந்நாடு உரிமையற்றிருக்க நாங்களென்ன உலுத்தர்களா? உதவாக்கரைகளா? சொல்லுங்கள் அன்னையே!"

"மகனே! நீ பேசும் பொற்சித்திரமாக இருக்கும்போது உனக்குப் பாலை மட்டுமா ஊட்டினேன்? பாலோடு நாட்டுப் பற்றையும் கலந்தல்லவா ஊட்டினேன்? பிலிப்பைன் நாட்டின் விதியை நிர்ணயிக்க வேண்டிய

வனல்லவா நீ? நன்கு படி கண்ணே!" என்று ஆசிகூறி உரையாடலுக்கு முற்றுப் புள்ளி இட்டது அவனது அன்னையின் அன்புள்ளம்.

காலச் சக்கரம் சுழல, கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு, ஆசிரியர்களின் நன்மதிப்பையும் பெற்றுக்கொண்டு, மாட்ரிட் பல்கலைக் கழகத்திற்குச் சென்று பொறியியல் துறையில் முதல்வனாகத் தேர்வுபெற்று, பிரெஞ்சு நாட்டிற்குச் சென்று பிரெஞ்சு மொழியும், மருத்துவமும், ஜெர்மனிக்குச் சென்று ஜெர்மனியும், இரசாயனக் கலையும், இயந்திரக் கலையும் கற்றுக் கொண்டான். இவ்விதம் அவன் பல பல்கலைக் கழகத்திற்குச் சென்று மருத்துவத்துறை, சட்டத் துறை, கலைத்துறை ஆகிய பல துறைகளில் சிறந்து விளங்கி உயர்ந்த அறிவைப் பெற்றான்.

இந்த நேரத்தில்தான் ரிசால், "பிலிப்பைன்" என்றொரு ஆராய்ச்சி மிகுந்த நூலை எழுதினான். அந்நூலில் பிலிப்பைன் நாட்டின் இயற்கை வளத்தைப் பற்றியும், அந்நாட்டின் சிறந்த துறைமுகங்களைப் பற்றியும், விரிவாகவும், விளக்கமாகவும் எழுதியிருந்தான். அதில் பிலிப்பைனரின் முன்னோர்கள் ஒரு காலத்தில் எப்படி வீரமும், தீரமும், சுதந்திரமும் பெற்றுச் சிறந்து வாழ்ந்தனர்; இன்று அவர்களின் சந்ததியினர் அந்நியர் ஆட்சியில் சிக்கி எப்படி அல்லற்படுகின்றனர், என்பதைப் பற்றியும் எழுதியிருந்தான். "பிலிப்பைனரின் முன்னோர் சிறந்த கவிஞர்கள். கல்லைச் சிலையாக்கிக் கருத்தைக் கிளரச் செய்யும் உயர்ந்த சிற்பிகள். அந்நியருக்கு அடிபணியாத ஆண்மையாளர்கள். அந்நாட்டின் பெண்கள் அடக்கமும், அன்பும், கற்புநெறி தவறாத பண்பும் மிகுந்தவர்கள். இத்தகைய ஓர் சிறந்த பண்பாடும், நாகரிகமும் மிக்கவர்கள் அந்நியரிடம் அடங்கியிருக்க, நாமென்ன ஆமைகளா? ஆண்மையற்றவர்களா? ஆர்த்தெழுங்கள் தோழர்களே! அந்நியரை விரட்டுவோம்! அன்னை நாட்டை மீட்போம்!" என்று புரட்சிக் கனல் தெறிக்க உரிமை முழக்கம் செய்திருந்தான் ரிசால்!

1887-ம் ஆண்டில்தான் அதை முதல் முதலில் வெளியிட்டான். அந்நூலைக் கண்டு ஆட்சியே அலறியது. அந்த நூல் நாட்டினுள்ளே வரலாகாது என்று தடை விதித்தனர் ஸ்பானியர். அந்த நூலைப் படித்தாலோ, அல்லது படிப்பவர் பக்கமிருந்து கேட்டாலோ, அவர்கள் செல்வம் முழுவதும் பறிமுதல் செய்வதோடு, நாடு கடத்தப்படுவார்கள். அந்நூலை வைத்திருப்பவர்களைத் தெரிவித்தால் அவர்களுக்கு நிறையப் பரிசளிக்கப்படும் என்று ஓர் சட்டமிட்டு அதை நாட்டியச் செய்தார்கள். ஆயினும் இரவு நேரங்களில் யாருமறியாவண்ணம் பிலிப்பைனர் பலர் அந்நூலை மறைவாகப் படித்தனர். படித்து

நாட்டுணர்ச்சி பெற்றனர். பெற்றவர்கள் ஒன்றுகூடித் தனியரசுக் கழகம் ஒன்றை உருவாக்கி அதன் தலைமைப் பதவியை ஏற்கும்படி ரிசாலுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினர். அதற்கு ரிசால் "நான் தலைவனாக இருக்கவிரும்பவில்லை; சாதாரணத் தொண்டனாகவே இருக்க விரும்புகிறேன்! என்னை மன்னியுங்கள்!" என்று பதில் எழுதி அனுப்பிவிட்டான்!

ரிசால் அழகிய தோற்றமும், அகன்ற நெற்றியும், அன்பு சொரியும் கண்களும், எவரையும் விரைவில் மயங்கவைத்துவிடும், நகைச்சுவையுடன் தெளிவாகவும், அழகாகவும் பேசுவதில் ஈடு இணையற்றவன். அவனுடைய அழகிய உருவத்தைக் கண்டு பிலிப்பைன் நாட்டு அழகி ஒருத்தி தன் உள்ளத்தையும், உடலையும் அவனிடம் ஒப்படைத்தாள். ரிசாலும் அவளை உயிரினும் மேலாக நேசித்து வந்தான். வெளிநாடுகளுக்குப் படிக்கச் சென்றிருந்த போதும் அடிக்கடி அவளுக்குப் பல காதற் கடிதங்கள் எழுதிக் குவித்துக் கொண்டிருந்தான். ஆனாலும் அந்த அழகியின் தாய் அவனை வெறுத்தாள்; ஏனெனில் அவனொரு புதுமையாளன். அவனைச் சாவு எந்த நேரத்திலும் அணைத்துக்கொள்ளும் என்ற அச்சத்தால். ரிசால் எழுதும் காதற் கடிதங்கள் அனைத்தையும் படித்துப் பார்த்துவிட்டுத் தீயிலிட்டுப் பொசுக்கிவிடுவாள் அந்த அழகியின் அன்னை. தன் அருமைக் காதலனிடமிருந்து ஒரு கடிதம்கூட வரவில்லையே என்று கசிந்துருகிக் கண்ணீர் சொரிந்துகொண்டிருந்தாள் அந்தக் கட்டழகி. அந்நிய நாட்டு ஆடலழகிகளின் வலையில் சிக்கிவிட்டானோவென்று ஐயப்பட்டாள் அந்த ஆரணங்கு. ரிசாலைப் பற்றிப் பொய்யுரைகளை விடாது புனைந்துரைத்துக்கொண்டிருந்தாள் அவளுடைய தாய். அதை அவளால் நம்ப முடியவில்லை—ஆயினும் ஒன்றும் புரியாது குழம்பினாள். இந்நேரத்தில் அவள் தாய் அவளைக் கட்டாயப்படுத்தி வேறொருவனுக்கு மணம் செய்து வைத்தாள். மங்கையின் மனம் மாறவில்லை. மனதுக்கிசைந்தவனை மணக்க முடியவில்லையே என்ற மாறாத மனக் குழப்பத்தால் நாளுக்கு நாள் மெலிந்தாள். ரிசாலின் நினைவால் உடல் தளர்ந்தாள். சில மாதங்களில் நோயுற்று அந்த எழிலும் இளமையும் நிறைந்த இள நங்கை இறந்தாள்.

தன் காதலி இறந்தாள் என்ற செய்தி கேட்டு உலகமே இருண்டுவிட்டதுபோல் கலங்கினான், மலை குலைந்தாலும் நிலை குலையாத மாவீரன் ரிசால்! அப்பொழுது மனக் கலக்கத்துடன், கருகிய தன் காதலைப்பற்றியும், கயவர் தம் கையில் சிக்கிய தன் நாட்டைப் பற்றியும் மிக உருக்கமாக "எல்பிலிபஸ்ட் ரிஸ்மோ" என்ற ஓர் புகழ்பெற்ற நாவலை உருவாக்கி 1891-ம் ஆண்டு வெளியிட்டான். அந்நேரத்தில் அவன் தாயிடமிருந்து அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் "மகனே!

உடல் நலிவுற்று இருக்கிறேன். என் வாழ்வில் ஒளியேற்ற ஓடி வா!" என்றிருந்தது. கடிதத்தைக் கண்டதும் தன் தாயைக் காணத் தாயகம் திரும்பினான். தாயின் உடலையும் சீர்படுத்தினான்.

1892-ம் ஆண்டு ஜூலை மாதம் ரிசால் தன் வீட்டில், பிலிப்பைன் தேசத்து இளைஞர்களையும், தொழிலாளர்களையும் ஒன்று திரட்டித் தன் திட்டத்தைக் கூறினான். "பிலிப்பைனர் இரகசிய சங்கம்" என்றொரு அமைப்பை ஏற்படுத்தி குழுக்கள் அமைத்து நாடு முழுதும் சூறுவளிப் பிரசாரம் செய்துவந்தான். திடீரென்று ஒரு நாள் ரிசால் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டான். அப்போது அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று தன் நாட்டில் அந்நியர்கள் செய்யும் கொடுமைகளை எடுத்துரைத்தான். பின்னர் சீனாவிற்குச் சென்று ஹாங்காங்கில் கண் வைத்தியத் தொழிலை நடத்தி அதில் வந்த ஏராளமான பணத்தையும் தன் நாட்டிற்காகவே செலவு செய்தான். அந்தச் சமயத்தில் விடுதலை எழுச்சி மிக்க பல நூல்களை இயற்றி வெளியிட்டான். பல பத்திரிகைகளில் நாடு விடுதலை பெறவேண்டிய அவசியம் குறித்து உணர்ச்சிகரமான கட்டுரைகளை எழுதினான். இதைக் கண்ட ஸ்பானியர் ஆட்சி மீண்டும் அலறியது. கடைசியில் ரிசாலின் உறவினர்களையெல்லாம் சிறையில் தள்ளிக் கொடுமைப்படுத்தினர் ஸ்பானியர்.

"என்மேல் உள்ள கோபத்தால் என் உறவினர்களைச் சிறையில் அடைத்துக் கொடுமை செய்கிறதே இந்தக் கொடுங்கோலர் ஆட்சி" என்றெண்ணி, மணிலா நகர் வந்தடைந்தான் அந்த மாமேதை! சிங்கம் தானே வந்து கூண்டிற்குள் சிக்கி விட்டதே என்ற பூரிப்பால் ரிசாலைச் சிறைப் பிடித்து டாபிடான் என்ற ஊரில் சிறை வைத்தனர். அந்த ஊரைச் சுற்றிப் பார்க்க மட்டும் அவனுக்கு அரசாங்கம் அனுமதியளித்தது.

இங்கிலையில் கண் வைத்தியத்திற்காக ஓர் ஆரணங்கு அவனிடம் அடிக்கடி வந்துகொண்டிருந்தாள். அம்மலர் விழியாள் அவனை விரும்புவதை அறிந்ததும், அவனுள்ளத்தில் மங்கி மறைந்திருந்த காதலுணர்வு மீண்டும் மலர ஆரம்பித்தது. சிறிது காலத்தில் அந்த மனங் கவர்ந்தாளையே மணந்துகொண்டான். கருத்தொத்த அக்கட்டழகியும் கணவனுடன் பொது வாழ்வில் ஈடுபட்டாள்.

புரட்சிப் பாக்களை இயற்றி இரகசியமாக நண்பர்களோடு நாடறிய வெளியிட்டான் ரிசால்! அதில் "புறப்படுங்கள் களம் நோக்கி, என்னரும் பிலிப்பைனர்களே! புது வாழ்வு பெறுவோம்! புல்லர்களை விரட்டுவோம்! புனிதப் போர் தொடுப்போம்!" என்று விடுதலைப் பண் பாடினான். இக் கருத்துக்கள் பிலிப்பைனரின் நரம்புகளிலே சென்று முறுக்

கேற்றின. கோழை வீரனுனன்! நாடு கொந்தளித்தது! புரட்சி! எங்கும் புரட்சி!

1896-ம் ஆண்டு ரிசாலும், அவன் மனைவியும் டாபிடானி லிருந்து மணிலா நகர் வந்தடைந்தார்கள். அரசாங்கம் விடுதலை வீரர்களைப் பிடித்துக் கடுமையாகத் தண்டித்தது. பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். ரிசாலைக் கைதியாக்கிச் சிறையில் அடைத்தனர். இராணுவ நீதிமன்றத்தில் வழக்கு நடந்து அவன் மீது இரண்டு குற்றங்கள் சாட்டப்பட்டன. "அரசியல் சட்டத்திற்கு விரோதமாக 'பிலிப்பைனர் இரகசிய சங்கம்' என்றொரு அமைப்பை ஏற்படுத்தியது முதல் குற்றம். எங்கள் ஆட்சியின் துப்பாக்கியை எதிர்க்கின்ற அளவுக்கு பெரும் புரட்சியை உண்டாக்கியது உன் பேனு—இது இரண்டாவது குற்றம்."

இந்த இரண்டு குற்றங்களுக்கு நாளை 1896-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ம் நாள் காலை கதிரவன் எழ ரிசால் சுட்டுக் கொல்லப்படவேண்டும் என்று இராணுவக் கோர்ட் தீர்ப்புக் கூறியது.

காலை மலர்ந்தது. சாண்டியாக்கோ கோட்டையிலிருந்து தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டான் கால்நடையாக. தூக்குமேடையில் ஏறி ஒளி பொருந்திய கண்களோடு நிமிர்ந்து பார்த்தான் ரிசால்! ஒரு பக்கத்தில் அவனது அன்னையும், அருமை மனைவியும், அன்புத் தந்தையும் அழுதபடியே நின்றிருந்தனர். மற்றொரு பக்கம் உறவினர்களும், நண்பர்களும், பிலிப்பைனர்களும் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தனர். இங்கிலையில் ரிசாலை நோக்கி "நீ ஏதாவது பேசுவதாயின் சிறிது நேரம் பேச அனுமதி இருக்கிறது," என்றான் ஸ்பானிய அதிகாரி. ரிசால் மிகவும் உருக்கமுடன் பேச ஆரம்பித்தான்.

"என்னரும் பிலிப்பைன் மக்களே! இன்னும் கொஞ்ச நேரத்தில் என்னை, அந்நியர் ஸ்பானியர் சுட்டுக் கொல்லப் போகிறார்கள். அதைக் கண்டு நான் அஞ்சவில்லை. அன்னை நாடு அடிமை நாடாய் அந்நியர் பிடியில் இருக்கக் கண்டும் வாளா இருப்பவன், அம்மண்ணில் பிறந்தவன் என்று நினைத்துக்கொள்வதற்கும், தன்னை ஒரு மனிதன் என்று கூறிக்கொள்வதற்கும் அருகதை அற்றவன் என்பது என் கருத்து. கடைசியாக இந்த அற்ப ஆசைக்காரர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். விடுதலை வீரர்களை, யாராவது துப்பாக்கியைக் காட்டியோ, தூக்கு மேடையில் நிறுத்தியோ அவர்கள் உள்ளத்தை மாற்ற முடியும் என்று நினைத்தால், அது அவர்கள் அறியாமையையே எடுத்துக் காட்டும். தாயக உணர்ச்சியுடையவர்களே, ஆணவக்காரர்களே! அவர்களின் அங்கங்களை அணு அணுவாக அறுத்தெறிந்தாலும் "விடுதலை, விடுதலை, விடுதலை" என்ற உரிமைத் தாகம் தணியாது

என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

அடிமையாய் அந்நியருக்கு அடிபணிந்து, ஆமையாய் ஆண்மையற்றவர்களாய் வாழ்வதை விட ஆதிக்கக்காரர்களை எதிர்த்து அழிவதே மேல்! விடுதலை என்பவரை, வீணர்களே! சுட்டு வீழ்த்தலாம். சுதந்திரம் வேண்டும் என்போரை, சூதுக்காரர்களே! தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லலாம். நாடு என்பவரை ஓடு என்று நாடு கடத்தலாம். உரிமை என்போரை உயிர் போகும் வரை உதைக்கலாம். உலுத்தர்களே! அவர்களின் உள்ள உறுதியை மாற்ற முடியுமா உங்களால்?

தணலின்மேல் நிறுத்தி, தடியால் அடித்து மண்டையை உடைத்து, இரு விழிகளையும் பிடுங்கி, நாடு கேட்பாயா? என்றால் அப்பொழுதும், நான் மட்டுமல்ல, என் உடலிலிருந்து வழியும் ஒவ்வொரு துளி இரத்தமும் நாடு நாடென்றே முழங்கும். இன்று இந்த ரிசாலைச் சுட்டு வீழ்த்தலாம். ஆனால் அவன் கூறிய கருத்துக்கள் உலவிக் கொண்டே இருக்கும் கடைசி பிலிப்பைனன் ஒருவன் இருக்கும் வரை! என்னைப்போல் தோன்றிக் கொண்டே இருப்பார்களே, அவர்களுக்கெல்லாம் நீங்கள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்...

அன்னையே!...அறிவிற் சிறந்த தந்தையே!......அறுசுவை உணவளித்து அறிவைப் புகட்டி அன்புடன் வளர்த்தீர்கள் என்னை. உங்கள் அன்புத் திருமகன் அன்னை நாட்டை மீட்கத் தன் ஆவியைத் துறந்தான் என்று கூறிப் பெருமைப்படுங்கள்! புளகாங்கிதம் எய்துங்கள்!

என்னரும் மனைவியே! என்னுயிரே! கலங்காதே! கண்ணீர் விடாதே. தன் கணவன், தாய் நாட்டிற்குத் தன்னுயிரைத் தருவதையே கடமையாக, பெருமையாக எண்ணுகிறானே என்று எண்ணிப் பூரிப்படை!

நண்பர்களே! அன்னை நாட்டில் அந்நியர்கள் அரைக் கணமும் இருக்கச் சம்மதிக்காதீர்கள்! நாடு மீட்டு நலம் பெற்று வாழுங்கள்! நான் செய்யவேண்டிய கடமை முடிகிறது. தொடர்ந்து செயலாற்றுங்கள். என்னைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்!

அன்னைத் திருநாடே! இது வரை உன் அடிமைத் தளையை அறுக்கப் பாடுபட்டேன். இன்று உன்னைப் பிரிகிறேன். விடுதலை பெற்று நீ நீடூழி வாழ்க!

என்று ஆவேசமாகப் பேசி முடித்தான். ஸ்பானிய இராணுவ அதிகாரி உத்தரவிட்டதும் சிப்பாய்கள் ரிசாலை நோக்கிச் சுட்டார்கள். மாவீரன் கீழே சாய்ந்தான்.

அடங்கியிருந்த புரட்சி மீண்டும் அனல் கக்கியது. அந்நியர்களைக் கண்ட இடங்களில் அடித்தார்கள்; சுட்டார்கள். அவர்கள் வாழும் இடங்களைச் சுட்டுப்

பொசுக்கினார்கள். இந்தப் புரட்சிக்கு ரிசாலின் மனைவியே தலைமை வகித்தாள். ஆயுத நிலையங்களைப் பிடித்துக்கொண்டனர். விடுதலை வீரனைத் தூக்கிலேற்றின தூக்கு மேடை சுக்கு நூறாக்கப்பட்டது. சூதுக்காரர்கள் ஒழிந்தார்கள்; சுதந்திரம் பெற்றார்கள்.

ரிசாலின் கல்லறையின் அருகே வானளாவிப் பறந்து கொண்டிருந்த சுதந்திரக் கொடியைக் கண்டதும் எல்லோரும் தலை வணங்கி, கல்லறைமீது மாலை அணிவித்து மரியாதை செய்தனர். ரிசாலின் மனைவியின் கண்களில் மட்டும் நீர் தாரை தாரையாக வழிந்துகொண்டிருந்தது. தன் கணவன் மட்டும் மடியாமலிருந்திருந்தால் நாடு சுதந்திரம் பெற்றிருக்க முடியுமா என்று நினைத்ததும், அவளையும் அறியாமல் ஒருவித இன்பம் அடைந்தாள்!"

—"திராவிட நாடு"

உதிர்ந்த மலர்கள்

வறுமையால் வாடிப் பசியால் தவிக்கும் மக்களிடத்தில் பொறுமையும் புன்னகையும் எதிர்பார்ப்பது பைத்தியக்காரத்தனம். அந்தக் கடலில் குமுறலும் கொந்தளிப்பும்தான் ஏராளமாக இருக்கும்.

—தாமஸ் ஹக்ஸிலி

ஒரு பெண் ஓர் அந்நிய நாடு போல! அந்த நாட்டிலே ஓர் ஆண் எவ்வளவு காலம்தான் உலவட்டுமே! அந்த நாட்டின் பழக்க வழக்கங்களை, அரசியலை, எண்ணம் ஏற்பாடுகளை, அவனால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. —பாட்மோர்

உண்மைகள் நமக்குப் பிடித்தமானவையாக இல்லை என்பதற்காக அவற்றை முறைத்துப் பார்ப்பதா? சீச்சீ! அது முட்டாள்தனம் மட்டுமல்ல, கோழைத்தனம்கூட. உண்மைகளை உண்மைகள் என ஒப்புக்கொள்வதே மனிதத் தன்மை. —டிண்டால்

குற்றமே இல்லாத பொருளை நீ காண வேண்டுமென்று விரும்புகிறாயா? அது நடவாத செயல்! அப்படி ஒரு பொருள், இதுவரை இருந்ததுமில்லை, இனி இருக்கப்போவதுமில்லை.

—அலெக்சாண்டர் போப்

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN, at Venkatesan Press, 2-65, Broadway, Madras—1.